**தமிழக அரசின் நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், 2009–2010ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தை, 2009 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 17ஆம் நாள் சட்டமன்றப் பேரவை முன் வைத்து ஆற்றும் உரை.**

***மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,***

மனம், மொழி, மெய் அனைத்தும் மக்கள் பிரச்சினைகளை முன் வைத்தே என்ற முடிவுடன் ஐம்பதாண்டுகளுக்கு மேலாக – ஆட்சி மன்றத்தில் ஆளுங்கட்சி வரிசையிலும், எதிர்த் தரப்பிலும் அமர்ந்து ஜனநாயகப் பணியாற்றிக் கொண்டிருக்கும், திராவிட முன்னேற்றக் கழகம் இந்தத் தமிழ்நாட்டில் ஏழை, எளிய சாதாரண சாமான்ய மக்கள், உழைக்கும் வர்க்கத்தினர், உழவர் பெருந்தகையினர், பாட்டாளிப் பெருமக்கள், நடுத்தர வர்க்கத்தினர் முதலியோரின் கண் திறக்கப்படவும், கைதூக்கி விடப்படவும் – ஏற்கனவே நான்கு முறை ஆட்சிப் பொறுப்பிலிருந்த போது தீட்டிய திட்டங்களையும், புரிந்த சாதனைகளையும் – அனுபவத்தில் உணர்ந்துள்ளவர்களாம் அன்புத் தமிழ்நாட்டு மக்கள்; தங்கள் மேன்மைக்காகவும், நல வாழ்வுக்காகவும், முன்னேற்றத்திற்காகவும், சமத்துவ சமுதாயம் அமைவதற்காகவும், அறிவார்ந்த முறையில் ஆட்சி நடத்தக்கூடிய திறனுடையார் யார் எனத் தெளிந்து தேர்வு செய்து,

> **“இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து**
>
> **அதனை அவன்கண் விடல்”**

என்னும் குறள் மொழிப்படி, இன்றைய ஆளும் கட்சியின் கையில் பொறுப்பை ஐந்தாவது முறையாக ஒப்படைத்ததன் பலனாக, கடந்த ஆண்டுகளில் இந்த அரசு ஆற்றியுள்ள சாதனைகளை இந்த அவையோரும் அருந்தமிழ் நாட்டோரும் அறிவர். அத்துடன் நில்லாது, கடந்த சனவரித் திங்களில் வெளிவந்த ஆளுநர் உரையில் அறிவித்த

திட்டங்களும், அவற்றையொட்டி ஏழை எளிய சாமானிய விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் மற்றும் உழைக்கும் வர்க்கத்திற்கும் வாழ்வளிக்கும் மற்ற பல திட்டங்களின் தொகுப்பாக, ஐந்தாவது முறை கலைஞர் ஆட்சியில், நான்காவது முறையாக நலன் பல குவிக்கும் நிதிநிலை அறிக்கையை அவையின் ஒப்புதலுக்காக இந்த அரசு முன்வைக்கிறது.

2. சமுதாயத் திருப்பணியில் ஓய்வும் சலிப்புமின்றி நாள்தோறும் ஈடுபட்டு உழைத்து வரும் நமது முதல்வர் கலைஞர் அவர்கள்; கடுமையான முதுகுவலியினால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அறுவைசிகிச்சை பெற்று வரும் நிலையிலும் கூட, இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்கும் பணியில் முழுமுதல் காரணமாக இருந்து தனது நேரத்தையும் நினைவையும் செலுத்தி இதனை முழுமையாக்கித் தந்தமைக்காகவும், என்னுடைய பணியில் பெரும்பகுதியைக் குறைத்தமைக்காகவும் தொடக்கத்திலேயே அவருக்கு எனது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, விரைவில் அவர் நலம் பெற்று நம்முடன் இணைந்து பணியாற்ற வரவேண்டுமென்ற என்னுடைய விழைவினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. சமூக நீதி கிடைத்திட – மண்டல் கமிஷனின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தப் போராட்டம் நடத்தியும் – இதே சட்டமன்றத்தில் அதற்காகத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியும் – மறைந்த பிரதமர் வி.பி.சிங் மூலம் அதில் வெற்றி பெற்றும், மிகவும் பின்தங்கிய சமுதாயத்தினருக்கு (சீர் மரபினர் உட்பட) கல்வி, வேலை வாய்ப்புகளில் 20 சதவீதமும் – மேலும் சிறுபான்மையினரான இஸ்லாமியர்களுக்கு 3.5 சதவீதமும் என இட ஒதுக்கீடு அளித்தும் – கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அவர்களைச் சார்ந்த மாணவர்கள் வருங்காலத்தில் நல்ல அறிவு வளர்ச்சி பெறவும் – வாழ்வில் முன்னேறவும் வழி வகுத்துள்ளது இந்த அரசு.

**4.** இன்று மத்திய மாநில அரசுகள் இணைந்து செயலாற்றி வருவதால், தமிழ்நாட்டில் பல புதிய பெருந்திட்டங்களை மத்திய அரசு நிறைவேற்றி வருகிறது. இதற்கு நன்றி தெரிவிக்கும் அதே வேளையில், இந்த அரசின் முழு முதல் கொள்கையான மாநில சுயாட்சிக் கொள்கையின்படி மாநில அரசுகள் தமக்குரிய அனைத்து உரிமைகளையும் முழுமையாகப் பெற்றிட இந்த அரசு தொடர்ந்து குரல் கொடுக்கும்.

**5.** இலங்கைத் தமிழர் நல்வாழ்விற்காகவும் – அவர்கள் பெற வேண்டிய நல உரிமைகளுக்காகவும் தொடர்ந்து இந்த அரசு குரல் கொடுப்பதோடு – இலங்கையில் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிற தமிழர்களுக்கு எதிரான போர் நிறுத்தப்பட்டு விரைவில் அமைதி காண்பதற்கு மற்ற நாடுகளோடு சேர்ந்து இந்திய அரசின் உறுதிமிக்க வலிமையான குரலும் இணைந்திட வேண்டும் என்ற இந்த அரசின் எதிர்பார்ப்பை நிறைவு செய்து, மேதகு குடியரசுத் தலைவரின் உரையிலேயே இக்கருத்தை வலியுறுத்தியுள்ள மத்திய அரசுக்கு நன்றியைத் தெரிவித்து, இக்கருத்தை செயல்படுத்திட இருசாராரும் போரை நிறுத்தி, நியாயமான உடன்பாட்டிற்கு வந்திடத் தேவையான தீவிர முயற்சிகளை இந்தியப் பேரரசு மேற்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறோம். **ஏற்கெனவே மத்திய அரசுடன் இணைந்து இந்த அரசு தமிழ்நாட்டில் வாழும் இலங்கைத் தமிழர்களின் நலனுக்காக செயல்படுத்திவரும் திட்டங்களோடு, ஆளுநர் உரையில் அறிவித்தவாறு, அவர்கள் வசிக்கும் அகதிகள் முகாம்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்த ரூபாய் 5 கோடி இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**6.** ஆளுநர் உரையில் அறிவித்தவாறு, ஏழை எளிய சாமானிய மக்கள், அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில், உயிருக்கு ஆபத்தான **51** நோய்களுக்கு, ரூபாய் ஒரு இலட்சம் வரையில் இலவச உயர் சிகிச்சை பெற வகை செய்யும், காப்பீட்டுத் திட்டத்திற்கான ஆணை

வெளியிடப்பட்டு, இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான காப்பீட்டு நிறுவனத்தை தேர்வு செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. **விவசாயத் தொழிலாளர் நலவாரியம், அமைப்புசாராத் தொழிலாளர் நலவாரியங்கள், மீனவர் நலவாரியம் போன்ற அனைத்து நலவாரிய உறுப்பினர்களின் குடும்பங்களும் இத்திட்டத்தால் பயன் பெறுவர். இதுதவிர, ரூபாய் 24,000–க்கு குறைவான ஆண்டு வருமானமுடைய அனைத்துக் குடும்பங்களும் இத்திட்டத்தால் பயனடையலாம். இந்த காப்பீட்டுத் தொகையை அரசே செலுத்தும். ஒரு கோடிக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்குப் பயனளிக்கும் இத்திட்டம் வரும் ஜூன் திங்களில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவங்கி வைக்கப்படும். இத்திட்டத்திற்கு 'உயிர் காக்கும் உயர்சிகிச்சைக்கான முதல்வர் கலைஞரின் காப்பீட்டுத் திட்டம்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக இந்த நிதிநிலை அறிக்கையில் ரூபாய் 200 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## வேளாண்மை மற்றும் கூட்டுறவு

7. வேளாண் துறைக்குப் புத்துயிரூட்டும் வகையில், விவசாயிகளின் கூட்டுறவுக் கடன்கள் அனைத்தையும், 13.5.2006 அன்று இந்த அரசு பொறுப்பேற்ற மேடையிலேயே தள்ளுபடி செய்து, அதற்காக கூட்டுறவு நிறுவனங்களுக்கு இதுவரை ரூபாய் 4,493 கோடி வரை நிதியுதவி வழங்கி ஈடு செய்துள்ளது. இதைத் தொடர்ந்து, நமது நாட்டில் உள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளின் வேளாண் கடன்கள் அனைத்தையும் மத்திய அரசு தள்ளுபடி செய்துள்ளது. இந்த நடவடிக்கைகளினால் நமது மாநிலத்தில் உள்ள விவசாயிகள் கடன் சுமையிலிருந்து முழுவதுமாக விடுவிக்கப்பட்டு, புதிய பயிர்க் கடன்களைப் பெற்று வருகின்றனர். 2006–2007 ஆம் ஆண்டில் ரூபாய் 1,250 கோடியும், 2007–2008 ஆம் ஆண்டில் ரூபாய் 1,360 கோடியும், நடப்பு நிதியாண்டில் இதுவரை ரூபாய் 1,325 கோடியும் புதிய பயிர்க் கடனாக

வழங்கப்பட்டுள்ளது. **வரும் 2009–2010 ஆம் ஆண்டில் ரூபாய் 2,000 கோடி அளவில் புதிய பயிர்க் கடன்கள் வழங்கப்படும்.**

8. ஒரு நாட்டின் வளத்திற்கு விவசாயிகளின் உழைப்பும் முயற்சியுமே நாடி நரம்புகளாக இருக்கின்றன என்பதை நன்குணர்ந்து அவர்களது நலம் நாடும் இந்த அரசு, அவர்தம் இன்றியமையாத் தேவையான கூட்டுறவுப் பயிர்க் கடன்களை எளிதாக தொடர்ந்து வழங்கிவர ஆவன செய்துள்ளதோடு, 9 சதவீதம் என்றிருந்த வேளாண் கடன்களுக்கான வட்டி வீதத்தை, இந்த அரசு 2006–2007 ஆம் ஆண்டில் 7 சதவீதமாகவும், 2007–2008 ஆம் ஆண்டில் 5 சதவீதமாகவும், கடந்த நிதிநிலை அறிக்கையில் 4 சதவீதமாகவும் குறைத்து, ஏழை விவசாயிகள் குறைந்த வட்டியில் கடன் பெறவும் வழிவகுத்துள்ளது. **மேலும், நாடு செழிக்கப் பாடுபடும் அந்த விவசாயிகளின்பால் இந்த அரசு கொண்டுள்ள பரிவு பாசத்தின் மற்றுமொரு எடுத்துக்காட்டாக; இந்தியத் திருநாட்டிலேயே முதன்முறையாக, தமிழகத்தில் வரும் நிதியாண்டு முதல் கூட்டுறவுப் பயிர்க்கடன்களை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்தும் அனைத்து விவசாயிகளுக்கும், இனிமேல் வட்டி கிடையவே கிடையாது என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றேன். அந்த வட்டித் தொகையை அரசே செலுத்திவிடும். இதற்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 140 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

9. கடந்த வரவு–செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் மூலம் கடன் பெறும் விவசாயிகளைக் கொண்ட சுயஉதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு, 10,000 குழுக்களுக்கு, தலா ரூபாய் 10,000 சுழல்நிதி உதவியும் வழங்கப்பட்டுள்ளது. **வரும் நிதியாண்டில் இக்குழுக்களின் எண்ணிக்கை 20,000 ஆக உயர்த்தப்படும். இப்புதிய குழுக்களுக்கும் சுழல்நிதி வழங்கப்படும்.**

10. செம்மை நெல் சாகுபடி (System of Rice Intensification) மற்றும் துல்லிய பண்ணைமுறை (Precision Farming) ஆகிய புதிய

தொழில்நுட்பங்களை நமது விவசாயிகள் பயன்படுத்த இந்த அரசு ஊக்கம் அளித்ததால், வேளாண் உற்பத்தித் திறன் அதிகரித்துள்ளது. இந்தத் தொழில்நுட்ப உத்திகளைப் பயன்படுத்த விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில், 385 வட்டாரங்களில் விவசாயத் தொழில்நுட்ப மையங்கள் (Agriclinics) அமைக்கப்பட்டு, விவசாயிகளுக்கு அனைத்து சேவைகளும் ஒரே இடத்தில் கிடைத்திட வழிவகுக்கப்பட்டுள்ளது. இதனால் இப்புதிய தொழில்நுட்பங்களைப் பின்பற்றும் விவசாயிகளின் வருவாயும் உயர்ந்துள்ளது. **அதிக வருவாய் ஈட்டவல்ல தோட்டக்கலைப் பயிர்களை அதிக பரப்பளவில் பயிர் செய்ய விவசாயிகளை ஊக்குவிக்கும் தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டம், மத்திய அரசின் நிதியுதவியுடன் வரும் நிதியாண்டில் ரூபாய் 200 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.** இத்திட்டத்தில் மாநில அரசின் பங்காக ரூபாய் 30 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

11. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு ரூபாய் 70 கோடி நிதியுதவி அளிக்கப்பட்டு, விவசாயிகளுக்குத் தட்டுப்பாடின்றி அனைத்து உரங்களும் கிடைக்க வழிவகுக்கப்பட்டுள்ளது. விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு மத்திய அரசின் குறைந்தபட்ச ஆதரவு விலை மற்றும் ஊக்கத் தொகையுடன், குவின்டாலுக்கு சன்னரக நெல்லுக்கு 120 ரூபாயும், சாதாரண ரக நெல்லுக்கு 100 ரூபாயும் கூடுதல் ஊக்கத் தொகையாக மாநில அரசின் நிதியிலிருந்து வழங்கி, சன்ன ரக நெல் மற்றும் சாதாரண நெல்லுக்கு முறையே குவின்டால் ஒன்றுக்கு ரூபாய் 1,000 மற்றும் ரூபாய் 1,050 எனக் கொள்முதல் விலையை உயர்த்தி இந்த அரசு வழங்கி வருகிறது. இதற்கு மாநில அரசு வழங்கும் ஊக்கத் தொகைக்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 200 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் கரும்புக்கான மாநில அரசின் பரிந்துரை விலையையும் உயர்த்தி, விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு ரூபாய் 1,220 கிடைப்பதை இந்த அரசு உறுதி செய்துள்ளது.

12. அண்மையில் வடகிழக்குப் பருவமழைக் காலத்தின்போது ஏற்பட்ட பெருமழை மற்றும் வெள்ளத்தினால் நமது மாநிலத்தில் 14.25 இலட்சம் ஏக்கர் பரப்பில் பயிரிடப்பட்ட நெல் மற்றும் பிற பயிர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டது. இதனால் பாதிக்கப்பட்ட 10.4 இலட்சம் விவசாயிகளுக்கு, ரூபாய் 388 கோடி இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளது. **இந்த வெள்ளம் பாதித்த 12 மாவட்டங்களிலும் இந்தப் பசலி ஆண்டிற்கான நிலவரி இரத்து செய்யப்படும்.**

13. இயற்கைச் சீற்றங்களால் ஏற்படும் பயிர் இழப்புகளிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு, விவசாயிகள் பயிர்க் காப்பீடு செய்ய, முதன் முறையாக காப்பீட்டுத் தொகையில் 50 சதவீதத்தை மானியமாக 2006–2007 ஆம் ஆண்டிலிருந்து இந்த அரசு அளித்து வருகிறது. இதனால் கடந்த மூன்று ஆண்டுகளில் பயிர்க் காப்பீடு செய்துகொள்ளும் விவசாயிகளின் எண்ணிக்கை ஒரு இலட்சத்திலிருந்து எட்டரை இலட்சமாக உயர்ந்துள்ளது. **வரும் ஆண்டிலும் இத்திட்டத்தின் மூலம் 25 இலட்சம் விவசாயிகளுக்குப் பயிர்க் காப்பீடு செய்துகொள்வதற்கு மானியம் அளிக்கப்படும். இதற்காக ரூபாய் 40 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் பயிர் இழப்பீடு வழங்குவதற்காக மாநில அரசின் பங்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 200 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

14. இந்த அரசு அக்கறையுடனும், ஆர்வத்துடனும் எடுத்த முயற்சிகளின் விளைவாக, கடந்த மூன்று ஆண்டுகளில் கழனிச் செல்வம் பெருகியுள்ளது. சான்றாக, 2005–2006 ஆம் ஆண்டில் 61 இலட்சம் டன் உணவு தானியங்கள் உற்பத்தி செய்யப்பட்டதற்கு மாறாக 2007–2008 ஆம் ஆண்டில் 84 இலட்சம் டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. நடப்பு 2008–2009 ஆம் ஆண்டில், அதிகமாக வெள்ளம் பாதித்துள்ளபோதிலும், நமது மாநிலத்தில் உணவு தானிய உற்பத்தி 91 இலட்சம் டன் அளவிற்கு இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

15. இந்த அரசால் தொடங்கப்பட்டு, இடையில் இல்லாமல் போய்விட்ட விவசாயத் தொழிலாளர் நல வாரியத்தை மீண்டும் அமைத்து; விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்குப் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்தின் கீழ் சுமார் 170 இலட்சம் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு, அவர்களுக்கு கல்வி உதவி, திருமண உதவி, ஓய்வூதியம் போன்ற பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. வரும் நிதியாண்டில் இத்திட்டத்திற்காக ரூபாய் 152 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

16. இந்த அரசின் அரிய திட்டமான, அனைத்து விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம் வழங்கும் திட்டம் வரும் ஆண்டுகளிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்காகத் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மாநில அரசின் மானிய உதவியாக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 279 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## கால்நடை வளர்ப்பு

17. இந்த அரசு பொறுப்பேற்ற பின் 492 கால்நடை மருத்துவர்கள் மற்றும் 743 கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். கால்நடை பாதுகாப்புத் திட்டம் மீண்டும் செயல்படுத்தப்பட்டு, இதுவரை நடந்துள்ள 12,037 முகாம்களில் 149 இலட்சம் கால்நடைகளுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. **வரும் நிதியாண்டில் 68 இலட்சம் கால்நடைகள் பயன்பெறும் வகையில் 5,500 கால்நடை முகாம்கள் நடத்தப்படும்.**

18. பால் உற்பத்தியைப் பெருக்க, மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு உயர் கலப்பினக் கறவை மாடுகளை வழங்கும் புதிய திட்டத்தைச் சென்ற நிதிநிலை அறிக்கையில் இந்த அரசு அறிவித்தது. இத்திட்டத்தின் கீழ், **வரும் நிதியாண்டிலும் பால் உற்பத்தி செய்யத் தகுந்த 100 கிராமங்களில், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு**

**இணையத்தின் மூலமாக 5,000 உயர் கலப்பின கறவை மாடுகளும், ஏனைய உதவிகளும் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும்.**

## பாசனம் மற்றும் வெள்ளத் தடுப்பு

**19.** காவிரி நதிநீர்ப் பங்கீட்டுப் பிரச்சினை, முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை உயர்த்துவதற்கு எதிர்ப்பு, நெய்யாறு நதிநீர்ப் பிரச்சினை மற்றும் பாலாற்றின் குறுக்கே தடுப்பணை ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகள் போன்ற; தமிழக விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதிக்கக்கூடிய அனைத்து நதிநீர்ப் பங்கீட்டுப் பிரச்சினைகளிலும், மதிக்கப்பட வேண்டிய இந்திய ஒருமைப்பாட்டின் அடிப்படையில், நமது மாநிலத்தின் உரிமைகளை முழுமையாகப் பாதுகாக்கத் தேவையான அனைத்து சட்டபூர்வ நடவடிக்கைகளையும் இந்த அரசு தொடர்ந்து உறுதியாக மேற்கொள்ளும்.

**20.** நமது மாநிலத்தில் உள்ள நீர் ஆதாரங்களை மேம்படுத்தியும், நவீன வேளாண் நடைமுறைகளைப் அறிமுகப்படுத்தியும், விளைபொருள் உற்பத்தித் திறனையும், விவசாயிகளின் வருவாயையும் பெருக்கும் நோக்கத்தோடு, ரூபாய் 2,547 கோடி மதிப்பீட்டில் உலக வங்கி உதவியுடன், நீர்வள நிலவளத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சுமார் 16 இலட்சம் ஏக்கர் விளைநிலங்களுக்குப் பயனளிக்கக்கூடிய இத்திட்டத்தின் கீழ், 25 துணை வடிநிலங்களில் தற்போது பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. **வரும் 2009–2010 ஆம் ஆண்டில், மேலும் 38 துணை வடிநிலங்களில் பணிகள் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்திற்காக 2009–2010 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 533 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**21.** தமிழ்நாட்டின் முக்கியப் பாசனப் பகுதிகளில் உள்ள கால்வாய்களை, நபார்டு வங்கி உதவியுடன் மேம்படுத்துவதற்கான பணிகளை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. இவற்றின் கீழ், கல்லணைக் கால்வாய் மற்றும் அதனைச் சார்ந்துள்ள பாசனக்

கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்காக ரூபாய் 50 கோடியும், காளிங்கராயன் கால்வாயைச் சீரமைப்பதற்காக ரூபாய் 4 கோடியும் இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**22. கோவை மற்றும் ஈரோடு மாவட்ட மக்களின் நீண்டநாள் கோரிக்கையான, அத்திக்கடவு–அவினாசி கால்வாய் திட்டத்தை செயல்படுத்துவது குறித்து ஆய்ந்து விரிவான அறிக்கை ஒன்றை அளிப்பதற்காக, காவிரி தொழில்நுட்பக் குழுவின் தலைவர் திரு. மோகனகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் ஒரு வல்லுநர் குழு அமைக்கப்படுகிறது. மேலும், நபார்டு வங்கியின் நிதியுதவி பெற்று, திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் அருகே உள்ள கோத்தயம் கிராமத்தில், சுமார் ரூபாய் 7 கோடி மதிப்பீட்டில் நல்லதங்காள் ஓடைக்குக் குறுக்கே அணை ஒன்று அமைக்கப்படும்.**

23. நமது மாநிலத்தின் நீர்ப் பற்றாக்குறை உள்ள பகுதிகளில், ஆறுகள், சிற்றாறுகள் போன்றவற்றில் வீணாகும் நீரைத் தடுப்பணைகள் மூலமாகச் சேமித்து ஆண்டு முழுவதும் வேளாண்மை மற்றும் குடிநீர் வசதிக்கு பயன்படுத்துவதற்கான பெரும் திட்டத்தை இந்த அரசு சென்ற நிதியாண்டில் அறிவித்தது. இதன் கீழ், ரூபாய் 550 கோடி மதிப்பீட்டில் 48,500 தடுப்பணைகள், ஊருணிகள் ஆகியவற்றை அமைப்பதற்கான பணிகள் பல்வேறு துறைகளின் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்காக, இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 100 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

24. 2006–2007 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு, ரூபாய் 12 கோடி மதிப்பீட்டில், மதுரை மாநகரில் ஏற்படும் வெள்ளப் பெருக்கைத் தடுப்பதற்கான திட்டத்திற்கும், ரூபாய் 211 கோடி மதிப்பீட்டில், கரூர், திருச்சி, அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில், காவிரி மற்றும் கொள்ளிடம் ஆறுகளில் நிரந்தர வெள்ளத் தடுப்புத் திட்டத்திற்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணிகளுக்காக, இந்த

வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 155 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. **சென்னை மாநகரில் வெள்ளப் பெருக்கினால் பாதிப்பு ஏற்படாமல் தடுப்பதற்காக, ரூபாய் 1,448 கோடி மதிப்பீட்டிலான பெருந்திட்டத்திற்கு, அண்மையில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் வரும் நிதியாண்டில் தொடங்கும்.**

**25.** தேசிய நதிநீர் இணைப்புத் திட்டத்தின் முதற்கட்டமாக மாநிலங்களுக்குள் பாயும் ஆறுகளை இணைக்கும் திட்டங்களைச் செயல்படுத்த, மத்திய அரசின் விரைவுபடுத்தப்பட்ட பாசன உதவித் திட்டத்தின் கீழ் நிதியுதவி அளிக்க தேசிய வளர்ச்சிக் குழு ஒப்புதல் அளித்துள்ளதன் அடிப்படையில்; வெள்ளக் காலங்களில் காவிரி ஆற்றில் பெருகும் உபரி நீரை வறண்ட மாவட்டங்களுக்குக் கொண்டு செல்வதற்கான காவிரி–குண்டாறு இணைப்புத் திட்டத்தின் கீழ் காவிரியின் குறுக்கே கட்டளையில் கதவணை கட்டும் திட்டத்திற்கும், தாமிரபரணி ஆற்றின் உபரிநீரை தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களின் வறண்ட பகுதிகளுக்குக் கொண்டு செல்வதற்கான தாமிரபரணி–கருமேனியாறு–நம்பியாறு இணைப்புத் திட்டத்திற்கும் இந்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இவற்றிற்கான ஆரம்பப்பணிகள் அண்மையில் துவங்கப்பட்டுள்ளன. இந்த இரண்டு திட்டப் பணிகளுக்கும் வரும் நிதியாண்டில் ரூபாய் 200 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டங்களுக்கான நிதியுதவியை விரைவில் வழங்கிடுமாறு மத்திய அரசை வலியுறுத்துகிறோம்.

**26.** வேளாண் தொழிலுக்கும், விவசாயப் பெருமக்களுக்கும் இந்த அரசு அளித்துவரும் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும் வகையில், இந்த வரவு–செலவுத் திட்ட இணைப்புகளில் வேளாண் துறைக்கான ஒதுக்கீடுகளைக் காட்டும் தனி விவர அறிக்கை (எண்.22) தரப்பட்டுள்ளது. வேளாண்மைத் துறை, கால்நடை, பால்வளம் மற்றும் மீனளத் துறை, கூட்டுறவுத் துறை, பொதுப்பணித் துறை, வருவாய்த் துறை

போன்ற பல துறைகளில் விவசாய வளர்ச்சிக்காக செய்யப்பட்டுள்ள மொத்த ஒதுக்கீடு ரூபாய் 5,236 கோடி என்பதை இங்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

## பொது விநியோகத் திட்டம்

27. பொது விநியோகத் திட்டத்தின் மூலம் குறைந்த விலையில் மக்களுக்குத் தேவைப்படும் பொருட்களை வழங்குவதன் மூலம் விலைவாசி உயர்வின் சுமையை இந்த அரசு பெருமளவு குறைத்துள்ளது. இந்த வகையில், ஏழை எளியோரின் பசிப்பிணி போக்கிட, நமது நாட்டிலேயே மிகக் குறைந்த விலையில் ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்கியும், சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின் கீழ், அத்தியாவசிய உணவுப் பொருள்களாகிய துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில் மற்றும் கோதுமை மாவு ஆகியவற்றையும், 'மலிவு விலையில் மளிகைப் பொருள்' திட்டத்தின் கீழ் 50 ரூபாய்க்கு பத்து மளிகைப் பொருள்களையும் வழங்கி இந்த அரசு சாதனை படைத்துள்ளது. இந்த அரசு எடுத்துள்ள இந்த முன்னோடி நடவடிக்கைகளுக்காக, உணவு மானியமாக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 2,800 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், தகுதியுள்ளோர் அனைவருக்கும் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு வருவதோடு, நியாயவிலைக் கடைகளில் சரியான எடையில் பொருட்கள் வழங்கப்படுவதை உறுதிசெய்ய ரூபாய் 12 கோடி செலவில் மாநிலத்தில் உள்ள அனைத்து நியாயவிலைக் கடைகளுக்கும் மின்னணு தராசுகளை இந்த அரசு வழங்கியுள்ளது.

## சட்டம் ஒழுங்கு

28. மாநிலத்தில் சட்டம் ஒழுங்கிற்கும், மதநல்லிணக்கத்திற்கும் பாதிப்பு ஏற்படாமல் இந்த அரசு தொடர்ந்து விழிப்புணர்வுடன் பணியாற்றி வருகிறது. அண்டை மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்குள் தீவிரவாதம் ஊடுருவுவதற்கான முயற்சிகள் அனைத்தும் காவல்துறையின் திறன் மிக்க நடவடிக்கையால் முறியடிக்கப்பட்டுள்ளன. பொது அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் வகையிலும், சட்ட விரோதமாகவும், வன்முறைச்

செயல்களில் ஈடுபடத் தூண்டும் வகையிலும் பேசுவோர் மற்றும் நாட்டின் இறையாண்மைக்கு எதிராக அறைகூவல் விடுப்போர் மீது இந்த அரசு தொடர்ந்து கடும் நடவடிக்கை எடுக்கும்.

**29.** காவல்துறையினரின் நலன் காக்க, இந்த அரசால் அமைக்கப்பட்ட மூன்றாவது போலீஸ் கமிஷனின் பரிந்துரைகள் அரசால் பெறப்பட்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளன. **444** பரிந்துரைகளில், **278** பரிந்துரைகளுக்கு இந்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். காவலர்கள் மற்றும் உதவி ஆய்வாளர்கள் காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கான அதிகாரத்தை காவல்துறைத் தலைவருக்கே அளித்தல், காவலர்களுக்கான படிகளை உயர்த்துதல் போன்றவை இவற்றுள் குறிப்பிடத்தக்கனவாகும். இந்த அரசு பொறுப்பேற்ற பின் இதுவரை **11,334** காவலர்களும், **741** உதவி ஆய்வாளர்களும் பணியமர்த்தப்படத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். மொத்தமாக **2005–2006** ஆம் ஆண்டில் ரூபாய் **1,346** கோடியாக இருந்த காவல்துறைக்கான ஒதுக்கீடு, வரும் நிதியாண்டில் ரூபாய் **2,855** கோடியாக உயரும்.

## நீதிமன்றங்கள்

**30.** ரூபாய் **300** கோடி மதிப்பீட்டில் நமது மாநிலத்தில் உள்ள நீதிமன்றங்களுக்குத் தேவையான கட்டடங்கள் மற்றும் குடியிருப்புகள், **4** ஆண்டு காலத்தில் அமைக்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள். இதன்படி ரூபாய் **138** கோடி மதிப்பீட்டிலான கட்டடப் பணிகளுக்கு, இதுவரை அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இவை தவிர மேலும் **22** இடங்களில் நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் குடியிருப்புகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட உள்ளது. இவை மட்டுமன்றி, கடந்த **3** ஆண்டுகளில் **101** புதிய நீதிமன்றங்கள் இந்த அரசால் தொடங்கப்பட்டுள்ளதோடு, நமது நாட்டிலேயே முன்னோடி முயற்சியாக வழக்குகளை விரைவாகத் தீர்க்க **56** மாலை நீதிமன்றங்கள் அமைக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

மொத்தமாக நீதித் துறைக்கு ரூபாய் 378 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## புதிய சட்டசபை வளாகம்

31. மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் 50 ஆண்டுகாலச் சட்டமன்றப் பணிப் பொன்விழாவின்போது அறிவித்தவாறு, சென்னை ஓமந்தூரார் அரசினர் வளாகத் தோட்டத்தில் நமது பாரம்பரிய திராவிடக் கட்டடக் கலை சார்ந்த முறையில் வடிவமைக்கப்பட்ட புதிய சட்டமன்ற வளாகத்தை அமைப்பதற்கான பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் 2010 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் நிறைவுறும். இதற்காக, இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 200 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## பள்ளிக் கல்வி

32. கடந்த மூன்று ஆண்டுகளில், பள்ளிகளில் பணிபுரியும் அனைத்து ஆசிரியர்களுக்கும் காலமுறை ஊதியம் வழங்கியும், காலியாக இருந்த ஆசிரியர் பணியிடங்களை நிரப்பியும், தேவைப்படும் இடங்களில் புதிய ஆசிரியர் பணியிடங்களைத் தோற்றுவித்தும், பள்ளிகளின் அடிப்படைக் கட்டமைப்பை மேம்படுத்தியும், அரசுப் பள்ளிகளில் புகட்டப்படும் கல்வியின் தரத்தை உயர்த்திட அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு எடுத்துள்ளது. **வரும் கல்வியாண்டில் 100 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 100 உயர்நிலைப் பள்ளிகள் மேனிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப்படும்.** நமது மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டுவரும் செயல்வழிக் கல்விமுறையைப் பல மாநிலங்களும் பின்பற்றத் துவங்கியுள்ளன.

33. அனைவருக்கும் கல்வித் திட்டத்தைத் தமிழகம் மிகச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. கடந்த மூன்றாண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் ரூபாய் 2,338 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 336 புதிய தொடக்கப்பள்ளிகள் தொடங்கப்பட்டு, 1,577

தொடக்கப்பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன. 2001–2002 ஆம் ஆண்டில் 12 சதவீதமாக இருந்த, தொடக்கக் கல்வியில் இடைநிற்போர் விழுக்காடு 2007–2008 ஆம் ஆண்டில் 1.23 சதவீதமாகக் குறைந்துள்ளது. 2001–2002 ஆம் ஆண்டில் 13 சதவீதமாக இருந்த நடுநிலைக் கல்வியில் இடைநிற்போர் விழுக்காடு, 2007–2008 ஆம் ஆண்டில் 1.90 சதவீதமாகக் குறைந்துள்ளது. இந்த ஆட்சியின் முதல் இரண்டாண்டுகளில் 15,788 வகுப்பறைகள் கட்டப்பட்டு, 2008–2009 ஆம் ஆண்டில் மேலும் 9,085 வகுப்பறைகள் கட்டப்பட்டு வருகின்றன. இத்திட்டம் வரும் நிதியாண்டில் ரூபாய் 820 கோடி செலவில் செயல்படுத்தப்படும். இதற்கான மாநில அரசின் பங்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 328 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. **மத்திய அரசின் புதிய திட்டமான தேசிய இடைநிலைக் கல்வித் திட்டத்தின் கீழ், வரும் நிதியாண்டில் ரூபாய் 800 கோடி மதிப்பீட்டில் மாநிலத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளை மேம்படுத்துவதற்கான பணிகள் செயல்படுத்தப்படும்.** இத்திட்டத்திற்கான மாநில அரசின் பங்காக ரூபாய் 200 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு கல்வியின் தரத்தை முன்னேற்ற இந்த அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகளின் பலனாக, அண்மையில் தேசிய அளவில் நடத்தப்பட்டுள்ள ஆய்வில் மொழி, கணக்கு மற்றும் வாசித்துப் புரிந்துகொள்ளுதல் ஆகியவற்றில் நமது மாநிலப் பள்ளிக் குழந்தைகள் இந்தியாவிலேயே சிறந்து விளங்குவதாக வந்துள்ள செய்தி மனநிறைவு அளிக்கிறது.

34. மாநிலத்தில் உள்ள அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளைச் சேர்ந்த பள்ளிகளின் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான பணிகளை இந்த அரசு நிறைவேற்றி வருகிறது. 2007–2008 ஆம் ஆண்டு முதல், ஊரக வளர்ச்சித் துறையால் செயல்படுத்தப்பட்டுவரும் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளின் கட்டடங்களைப் பழுதுபார்த்துச் சீரமைக்கும் திட்டத்தின் கீழ் இதுவரை 14,546 பள்ளிகளில் ரூபாய் 188 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. **வரும் நிதியாண்டிலும், ரூபாய் 85 கோடி**

**மதிப்பீட்டில் மேலும் 5,000 பள்ளிகளில் இப்பணிகள் மேற்கொள்ளப்படும்.** மேலும், நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் 421 அரசு உயர்நிலை மற்றும் மேனிலைப் பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. வரும் நிதியாண்டில் இப்பணிகளுக்காக ரூபாய் 250 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

35. இந்த அரசு பொறுப்பேற்றது முதல் கடந்த 3 ஆண்டுகளில் நமது மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கும் மேனிலைப் பள்ளிகளுக்கும் கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. இதுமட்டுமன்றி, அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் கீழ் இயங்கும் அனைத்து நடுநிலைப் பள்ளிகளுக்கும் 3 ஆண்டு காலத்தில் கணினிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் சென்ற வரவு–செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு 2,200 பள்ளிகளுக்கு கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. **வரும் நிதியாண்டில் மேலும் 2,500 நடுநிலைப் பள்ளிகளுக்குக் கணினிகள் வழங்க ரூபாய் 50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

36. தமிழ்நாட்டில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பயிலும் சுமார் 11 இலட்சம் மாணவ மாணவியர்க்கு 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வு கட்டணத்தையும், 6ஆம் வகுப்பிலிருந்து 12ஆம் வகுப்பு வரை பயிலும் சுமார் 50 இலட்சம் மாணவ மாணவியர் செலுத்தி வந்த சிறப்புக் கட்டணத்தையும், அரசுத் தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவ மாணவியர்கள் செலுத்திவந்த சிறப்புக் கட்டணத்தையும் இந்த அரசு ரத்து செய்துள்ளது. **இதன் மூலம் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் முழுமையான இலவசக் கல்வி அளிக்கப்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளது.**

37. **நமது மாநிலத்தில் உள்ள நடுநிலை, உயர்நிலை மற்றும் மேனிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்குக் கண்பார்வைப் பரிசோதனை செய்து, பார்வைக் குறைபாடு**

**உள்ளவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்குவதற்கான புதிய திட்டம், தேசிய ஊரக சுகாதார இயக்கத்தின் மூலம், ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் வரும் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்படும்.**

38. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் ஏழை எளிய மாணவர்களுக்கு இலவசச் சீருடை வழங்கும் திட்டத்திற்காக ரூபாய் 58 கோடியும், இலவசப் பாடநூல் வழங்கும் திட்டத்திற்காக ரூபாய் 70 கோடியும் வரும் நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாணவர்களுக்கு இலவச மற்றும் சலுகைக் கட்டணத்தில் பேருந்துப் பயணச் சீட்டு வழங்குவதற்காக அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு மானிய உதவியாக ரூபாய் 300 கோடியும், பதினொன்றாம் வகுப்பில் பயிலும் மாணவ மாணவியருக்கு இலவச மிதி வண்டி வழங்கும் திட்டத்திற்கு ரூபாய் 112 கோடியும் இந்த வரவு–செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மொத்தமாக, 2005–2006 ஆம் ஆண்டில் ரூபாய் 4,110 கோடியாக இருந்த பள்ளிக் கல்வித் துறைக்கான ஒதுக்கீடு, 2009–2010 ஆம் ஆண்டில் ரூபாய் 9,147 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

39. சாதாரண பொதுமக்கள் மற்றும் ஏழை எளிய மாணவர்களுக்கு அனைத்து நூல்களையும் படிக்கும் வாய்ப்பை அளிக்கும் நோக்கத்தோடு, **சென்னையில் சர்வதேசத் தரத்திலான நவீன மாநில நூலகம்** ஒன்று அமைக்கப்படும் என இந்த அரசு அறிவித்திருந்தது. ரூபாய் 166 கோடி மதிப்பீட்டிலான இந்நூலகத்திற்கு 16.8.2008 அன்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. **இப்பணிகள் 2010 மே திங்களில் நிறைவுறும்.**

## உயர்கல்வி

40. மாணவர்களுக்கான வகுப்பறைத் தேவையைக் கருத்தில் கொண்டு, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில்

1,142 வகுப்பறைகள் ரூபாய் 65 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன. இப்பணிகளுக்கு இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 27 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. **உயர்கல்வி பயில போதிய வசதிகள் இல்லாத பின்தங்கிய மாவட்டங்களில், மத்திய அரசின் நிதியுதவியுடன் வரும் ஆண்டுகளில் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்படும்.**

41. இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர், ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் தடையின்றி உயர்கல்வி பெறும் வகையில் அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இளங்கலை பட்டப்படிப்பு பயிலும் அனைத்து மாணவர்களுக்கும், கல்விக் கட்டணத்தை ரத்து செய்ததோடு, அரசுக் கல்லூரிகளில் இருந்த சுயநிதிப் பாடப்பிரிவுகள் அனைத்தையும் பொதுப் பாடப்பிரிவுகளாக மாற்றி அமைத்தது. இத்துடன், மாணவர்களுக்குத் தேவையற்ற சுமையாக இருந்த பொது நுழைவுத் தேர்வும் அகற்றப்பட்டு, கிராமப்புர மற்றும் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் அதிக எண்ணிக்கையில் தொழிற்கல்வி பெற வகை செய்யப்பட்டுள்ளது.

42. இந்த ஆட்சியில், திருச்சி, கோவை மற்றும் திருநெல்வேலியில் அண்ணா பல்கலைக்கழகங்கள் மூன்று அமைக்கப்பட்டுள்ளதோடு, மாநிலத்தின் பின்தங்கிய பகுதிகளான திண்டிவனம், விழுப்புரம், பண்ணுருட்டி, திருக்குவளை, இராமநாதபுரம் மற்றும் அரியலூர் ஆகிய இடங்களில் ஆறு புதிய பொறியியல் கல்லூரிகளும் தொடங்கப்பட்டுள்ளன. **வரும் நிதியாண்டில் அரசுப் பொறியியல் கல்லூரிகள் இல்லாத, திருவண்ணாமலை, தஞ்சாவூர், திண்டுக்கல், தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் புதிய பொறியியல் கல்லூரிகள் அண்ணா பல்கலைக்கழகங்கள் மூலமாகத் தொடங்கப்படும்.** மேலும், தற்போதுள்ள அரசுப் பொறியியல் கல்லூரிகள் மற்றும் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளின் கட்டமைப்பு வசதிகளை

மேம்படுத்த, உலக வங்கி நிதியுதவியுடன் தொழிற்கல்வித் தரமேம்பாட்டுத் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகள் செயல்படுத்தப்படும். மொத்தமாக, உயர்கல்வித் துறைக்கான ஒதுக்கீடு 2005–2006 ஆம் ஆண்டில் இருந்த ரூபாய் 745 கோடியிலிருந்து, வரும் நிதியாண்டில் ரூபாய் 1,463 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

## மக்கள் நலவாழ்வு

43. மனிதநேய மருத்துவ சேவையை மகேசன் சேவையெனக் கருதும் இந்த அரசு, கடந்த மூன்று ஆண்டுகளில் அரசு மருத்துவமனைகளில் 4,156 மருத்துவர்களையும், 5,183 செவிலியர்களையும் நியமனம் செய்துள்ளது. மேலும், அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், தலா 3 செவிலியர்களைப் பணியமர்த்தி, இந்த அரசு ஊரகப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு 24 மணி நேர மருத்துவ சேவை கிடைக்கச் செய்துள்ளது. இதுமட்டுமன்றி, 125 அரசு மருத்துவமனைகள் அவசரகால சிகிச்சை மையங்களாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. இத்தகைய நடவடிக்கைகளால், ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடைபெறும் மகப்பேறுகளின் எண்ணிக்கையானது, 2006 ஆம் ஆண்டில் இருந்த 80,776 என்ற அளவிலிருந்து 2008 ஆம் ஆண்டில் 2,41,078 என உயர்ந்துள்ளது.

44. நோய்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து உரிய சிகிச்சை பெற உதவும் முன்னோடித் திட்டமான 'வருமுன் காப்போம் திட்டம்' இந்த அரசால் மீண்டும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் மருத்துவ வல்லுநர் குழுக்களைக் கொண்டு, மாநிலமெங்கும் 9,000 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. இந்த மருத்துவ முகாம்களில் சுமார் 91 இலட்சம் ஏழை எளியோர் பயனடைந்துள்ளனர். **வரும் நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் 4,500 முகாம்கள் தொடங்கி தொடர்ந்து நடத்தப்படும்.**

45. உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் தமிழ்நாடு சுகாதார அமைப்புகள் திட்டத்தின் முதல் கட்டத்தில் 35 அரசு மருத்துவமனைகளிலும், இரண்டாம் கட்டத்தில் 224 மருத்துவமனைகளிலும் ரூபாய் 276 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், இந்த மருத்துவமனைகளுக்குத் தேவையான கருவிகள், மருத்துவ ஊர்திகள் ரூபாய் 140 கோடி செலவில் அளிக்கப்பட்டு வருகின்றன. இதுமட்டுமன்றி, தேவைப்படும் இடங்களில் கூடுதலான சிறப்பு மருத்துவர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். இத்திட்டத்திற்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 279 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. **சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரிக்கு, ரூபாய் 5 கோடி செலவில் புதிய MRI கருவியும், சென்னை பொது மருத்துவமனைக்கு ரூபாய் 4 கோடி செலவில் புதிய Cath Lab கருவியும் வழங்கப்படும். மொத்தமாக, வரும் நிதியாண்டில் மாநிலத்தில் உள்ள அரசு மருத்துவமனைகளுக்கு கருவிகள் வாங்க ரூபாய் 53 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

46. **சென்னை மத்திய சிறைச்சாலை புழலுக்கு மாற்றப்பட்டுள்ளது. சென்னை பொது மருத்துவமனையில் புறநோயாளிகளும், பிற நோயாளிகளும் இடப்பற்றாக்குறையால் இடருறுவதைக் கருத்தில் கொண்டு, சிறைச்சாலை இருந்த இடத்தைச் சென்னை பொது மருத்துவமனையின் விரிவாக்கத்திற்காகப் பயன்படுத்த இந்த அரசு முடிவு செய்துள்ளது. இந்த இடத்தில், ரூபாய் 70 கோடி செலவில் சென்னை பொது மருத்துவமனைப் புறநோயாளிகளுக்கான பெரும் வளாகம் அமைக்கப்படும். இதுதவிர, எஞ்சியுள்ள இடத்தில் மத்திய அரசின் நிதியுதவியுடன் ரூபாய் 400 கோடி மதிப்பீட்டிலான மிகப் பெரிய இரத்த வங்கி ஒன்றும் நிறுவப்படும்.**

47. **தென்மாவட்ட மக்கள் பயனடையும் வகையில், மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையினை, புது டெல்லியில் உள்ள அகில**

**இந்திய மருத்துவ அறிவியல் கழக மருத்துவமனை போன்ற பல சிறப்புப் பிரிவுகளைக் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டும் என்ற இந்த அரசின் கோரிக்கைக்கு மத்திய அரசு அண்மையில் இசைவளித்துள்ளது. இதன்படி, தற்போதுள்ள இராஜாஜி மருத்துவமனை மேம்படுத்தப்படுவதோடு, மதுரைக்கு அருகே உள்ள தோப்பூரில் இந்த மருத்துவமனையின் சிறப்புப் பிரிவு வளாகம் அமைக்கப்படும். ரூபாய் 150 கோடி மதிப்பீட்டிலான இப்பணிகளுக்குத் தேவைப்படும் நிலத்தையும், மாநில அரசின் பங்காக ரூபாய் 25 கோடி நிதியையும் இந்த அரசு வழங்கும்.**

**48. தமிழ்நாட்டில் நீரிழிவு நோய் மற்றும் சிறுநீரகக் கோளாறு காரணமாக டயாலிசிஸ் சிகிச்சை தேவைப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை உயர்ந்து வருகிறது. இச்சிகிச்சை மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள ஏழை எளியோருக்கும் கிடைக்கும் வகையில், அனைத்து மாவட்டங்களிலும் குறைந்தபட்சம் ஒரு அரசு மருத்துவமனையில், இச்சிகிச்சை வழங்கப்படுவதற்கு உறுதி செய்ய, ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் டயாலிசிஸ் கருவிகள் அரசு மருத்துவமனைகளுக்கு அளிக்கப்படும்.**

**49.** இந்த அரசு பொறுப்பேற்ற பின் விழுப்புரம், திருவாரூர், தருமபுரி, சிவகங்கை மற்றும் பெரம்பலூர் ஆகிய இடங்களில் புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்க ஆணையிட்டுள்ளது. இந்த மருத்துவக் கல்லூரிகள் மற்றும் மருத்துவமனைகளுக்குத் தேவையான கட்டடங்கள் மற்றும் ஏனைய வசதிகளை அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளுக்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் **307** கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அனைத்து அரசு மருத்துவமனைகளுக்கும் மருந்துகள் வாங்குவதற்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் **224** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மொத்தமாக, **2005–2006** ஆம் ஆண்டில் ரூபாய் **1,487** கோடியாக இருந்த மக்கள் நல்வாழ்வுத் துறைக்கான மொத்த

ஒதுக்கீடு, **2009–2010** ஆம் ஆண்டில் ரூபாய் **3,391** கோடியாக உயர்ந்துள்ளது.

## தொழில் துறை

**50.** தொழில் முனைவோரை ஊக்குவித்து, வேலைவாய்ப்புகளைப் பெருக்குவதற்கு இந்த அரசு எடுத்துவரும் முயற்சிகளுக்குக் கிடைத்த வெற்றியாக, கடந்த **3** ஆண்டுகளில் சுமார் **2** இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய, ரூபாய் **37,595** கோடி முதலீட்டிலான **29** புதிய தொழிற்சாலைகளை நிறுவ தொழில் முனைவோர் முன்வந்துள்ளனர். இவற்றில் **8** தொழிற்சாலைகள் ஏற்கெனவே தமது உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. குறிப்பாக, இந்த குறுகிய காலத்திலேயே, முக்கியத் தொழில்களான மோட்டார் வாகனங்கள் மற்றும் மின்னணு சாதனங்கள் உற்பத்தி ஆகியவற்றில் நமது நாட்டின் முன்னணி மாநிலமாக தமிழகம் உருவெடுத்துள்ளது. உலக அளவில் தலைசிறந்து விளங்கும், டெய்ம்லர்–ஹீரோ, அசோக்லேலண்ட்–நிசான், கேட்டர்பில்லர் போன்ற கனரக வாகன உற்பத்தியாளர்களும், டெல்ஃபி, அலிசன், போன்ற வாகன பாகங்கள் உற்பத்தியாளர்களும் தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளை நிறுவ முன்வந்துள்ளனர். இவ்வாறே டெல் கம்ப்யூட்டர், மோட்டரோலா, சாம்சங், நோக்கியா–சீமென்ஸ் நெட்வொர்க் போன்ற முன்னணி நிறுவனங்கள் மின்னணு சாதனங்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை நிறுவியுள்ளன.

**51.** தென்மாவட்டங்களில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு, இம்மாவட்டங்களில் ரூபாய் **50** கோடிக்கு மேல் முதலீடு செய்தாலே, மாநிலத்தின் மற்ற மாவட்டங்களில் ரூபாய் **250** கோடிக்கு மேலான முதலீடுகளுக்கு வழங்கப்படும் சலுகைகளை இந்த அரசு வழங்கி வருவதன் விளைவாக; திருநெல்வேலி மாவட்டம் கங்கைகொண்டானில் ATC டயர்ஸ் நிறுவனம் டயர் உற்பத்தித் தொழிற்சாலையை நிறுவி வருகிறது. மேலும், இதே இடத்தில் டி.வி.எஸ். ஸ்ரீசக்கரா டயர்ஸ் மற்றும் எல்ஜி டிரெட் போன்ற முன்னணி

நிறுவனங்களும், திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டையில் கெப்பாரோ இன்ஜினியரிங் மற்றும் ஃப்பென்னர் இந்தியா நிறுவனங்களும் தங்கள் தொழிற்சாலைகளை நிறுவ முன்வந்துள்ளன.

**52.** தொழில்களைத் தொடங்க தொழில் முனைவோரை ஊக்குவிப்பதோடு, இத்தொழிற்சாலைகளின் வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளையும் இந்த அரசு தொடர்ந்து மேம்படுத்தும். **மாநிலத்தில் உள்ள தொழிற்பேட்டைகளுக்குச் செல்லும் அணுகு சாலைகள் ரூபாய் 10 கோடி செலவில் மேம்படுத்தப்படும். தொழிலாளர்கள் அதிகம் உள்ள இடங்களான திருப்பெரும்புதூரிலும், திருப்பூரிலும், தலா 1,000 தொழிலாளர்கள் தங்குவதற்கான வசதிகளுடன் கூடிய தங்குமிடங்கள் (Dormitories)அமைக்கப்படும்.**

**53. சிப்காட் தொழிற்பூங்காக்கள் அமைப்பதற்காக ஒரு ஏக்கருக்கு கூடுதலான நிலம் அளித்த குடும்பங்களில், குறைந்தபட்சம் ஒருவருக்காவது, அப்பகுதிகளில் அமைக்கப்படும் தொழிற்சாலைகளில் வேலைவாய்ப்பு அளிக்கப்பட இந்த அரசு உறுதியாக ஆவன செய்யும். இதற்காக தொழிற்பூங்காக்களில் திறன் மேம்பாட்டு பயிற்சி மையங்களை அமைத்து, அத்தகைய குடும்பங்களில் உள்ள இளைஞர்களின் திறனை மேம்படுத்துவதற்கான பணிகளை சிப்காட் நிறுவனம் மேற்கொள்ளும்.**

**54.** சிறப்பாக இயங்கிவரும் பொதுத்துறை நிறுவனமான தமிழ்நாடு காகிதத் தொழிற்சாலை நிறுவனம் ரூபாய் 1,000 கோடி மதிப்பீட்டில் விரிவாக்கப்பட்டு வருகிறது. இப்பணிகள் 2010 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் நிறைவுறும்போது, இத்தொழிற்சாலையின் காகித உற்பத்தித் திறன் ஆண்டொன்றுக்கு 2.55 இலட்சம் டன் என்பதிலிருந்து, 4 இலட்சம் டன்னாக உயரும்.

## குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள்

**55.** குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களை ஊக்கப்படுத்த, நமது நாட்டிலேயே முதல் முறையாக இத்தொழில்களுக்கான

தனிக் கொள்கை ஒன்றை இந்த அரசு வெளியிட்டுள்ளது. இக்கொள்கையின்படி மாநிலத்தில் உள்ள பின்தங்கிய வட்டாரங்களில் அமைக்கப்படும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கு வழங்கப்படவுள்ள மூலதன மானியத்திற்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 30 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், குறு தொழில்களுக்கு மதிப்புக் கூட்டுவரியைத் திருப்பி அளிக்கும் சலுகைக்காக ரூபாய் 10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## தகவல் தொழில்நுட்பம்

**56.** தகவல் தொழில்நுட்பத் துறையில் நமது நாட்டிலேயே முன்னணி மாநிலமாகத் தமிழகம் விளங்கவும், இந்த வளர்ச்சியின் பயன்களை நமது மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளில் வசிப்போருக்கும் கிடைக்கச் செய்யவும் தேவையான அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு மேற்கொண்டு வருகிறது. தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்குப் பல்வேறு சலுகைகளுடன் கூடிய புதிய தகவல் தொழில்நுட்பக் கொள்கை இந்த அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. **கோயம்புத்தூரில் ரூபாய் 380 கோடி செலவில் அமைக்கப்பட்டுவரும் தகவல் தொழில்நுட்பப் பூங்காவுக்கானப் பணிகள் வரும் செப்டம்பர் திங்களில் நிறைவுறும்.** மேலும், மதுரை திருச்சி, திருநெல்வேலி, சேலம் மற்றும் வேலூர் நகரங்களிலும் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்தகைய முயற்சிகளினால், 2005–2006 ஆம் ஆண்டில் ரூபாய் 13,615 கோடியாக இருந்த நமது மாநிலத்தின் மென்பொருள் ஏற்றுமதி 2007–2008 ஆம் ஆண்டில் ரூபாய் 28,490 கோடியாக உயர்ந்துள்ளது.

**57.** அரசின் பல்வேறு துறைகளின் அடிப்படைத் தகவல்கள் மற்றும் புள்ளி விவரங்களை ஒருங்கே சேமித்து, இத்தகவல்கள் மற்றும் ஏனைய சேவைகளை இணையம் மூலம் அளிக்க ஏதுவாக மாநில தகவல் மையம் (State Data Centre) ரூபாய் 56 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே முதல் முதலாக, முழு மாநில

இணைய வலை அமைப்பு (State Wide Area Network) ஏற்படுத்திய பெருமையும் தமிழகத்தையே சாரும். இந்த இணைய வலை அமைப்பின் கீழ், மாவட்ட, வருவாய்க் கோட்ட, வட்ட மற்றும் வட்டாரத் தலைமையிடங்கள் அனைத்தும் மாநிலத் தலைநகருடன் இணைக்கப்பட்டுள்ளன.

58. இந்த அரசின் தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றின்படி, இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தின் நான்கு கட்டங்களில் 1 கோடியே 4 இலட்சத்து 42 ஆயிரத்து 500 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை ஒளிவு மறைவற்ற முறையில் கொள்முதல் செய்ய ஆணையிடப்பட்டு, அவை பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. **வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாத மீதமுள்ள குடும்பங்களுக்கும் சுமார் 25,00,000 வண்ணத் தொலைக்காட்சி பெட்டிகளை வழங்கிட, வரும் நிதியாண்டில் ரூபாய் 500 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## சாலை மேம்பாடு

59. மக்களின் அன்றாடப் பயன்பாட்டிற்கும், ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கும் நல்ல சாலை வசதி இன்றியமையாதது என்பதைக் கருத்தில் கொண்டு, கடந்த 3 ஆண்டுகளில் சாலைகளை மேம்படுத்தவும், பராமரிக்கவும் போதிய நிதி ஒதுக்கீடு செய்து இந்த அரசு பல்வேறு மேம்பாட்டுப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. 2001–2006 ஆம் ஆண்டுக் காலத்தில், 5 ஆண்டுகளில் ரூபாய் 4,328 கோடி மதிப்பிலான சாலை மேம்பாட்டுப் பணிகளும், ரூபாய் 1,534 கோடி செலவில் சாலைப் பராமரிப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் ஒப்பிடும்போது, கடந்த 3 ஆண்டுகளில் மட்டுமே சாலை மேம்பாட்டிற்கு ரூபாய் 6,617 கோடி அளவிலும், சாலை பராமரிப்பிற்கு ரூபாய் 2,503 கோடி அளவிலும் நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

**60.** இந்த அரசு பொறுப்பேற்ற பின் இதுவரை **45,943** கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகளில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. **4,730** கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகள் இருவழித் தடங்களாக அகலப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், **551** சிறு மற்றும் பெரிய பாலங்கள் ரூபாய் **577** கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. **2009–2010 ஆம் நிதியாண்டில் சாலை மேம்பாடு மற்றும் பாலப்பணிகளுக்கான மூலதனச் செலவிற்காக ரூபாய் 3,087 கோடியும், சாலைகளைப் பராமரிக்கும் பணிகளுக்காக ரூபாய் 880 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 12,500 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகள் மேம்படுத்தப்படுவதோடு, சுமார் 1,000 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகள் இருவழித்தடங்களாக மாற்றப்படும். மேலும், 194 பெரிய மற்றும் சிறு பாலங்கள் கட்டும் பணிகள் முடிக்கப்படும்.**

**61.** திராவிட முன்னேற்றக் கழகத்தின் கடந்த ஆட்சிக் காலங்களின் போது, சென்னையில் அண்ணா மேம்பாலம், நெல்லையில் ஈரடுக்கு மேம்பாலம், கோவையில் மூன்றடுக்கு மேம்பாலம், காவிரியின் குறுக்கே திருமானூர் மற்றும் குளித்தலையில் பாலங்கள் என பல பெரும்பாலங்கள் கட்டப்பட்டதை நீங்கள் அறிவீர்கள். **இதுபோன்றே, கடந்த மூன்று ஆண்டுகளில் முன் எப்போதும் இல்லாத அளவில் ரூபாய் 1,730 கோடி மதிப்பீட்டில் பல்வேறு இரயில்வே மேம்பாலங்களை கட்ட இந்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்தப் பணிகளுக்காக ரூபாய் 400 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**62.** உலகவங்கி உதவியுடன் ரூபாய் **2,442** கோடி மதிப்பீட்டிலான தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் சாலை மேம்பாட்டுப் பணிகள், புறவழிச் சாலைகள் அமைத்தல் மற்றும் சாலை பராமரிப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. **இத்திட்டத்தின் இரு முக்கியக் கூறுகளான, ஆற்காடு–திருவண்ணாமலை–விருத்தாச்சலம்–திருவாரூர் சாலை மற்றும் கிழக்குக் கடற்கரைச் சாலையில், நாகப்பட்டினம்–இராமநாதபுரம்–தூத்துக்குடி**

**சாலை ஆகியவற்றிற்கான மேம்பாட்டுப் பணிகள் வரும் நிதியாண்டில் நிறைவடையும். கிழக்குக் கடற்கரைச் சாலையில் எஞ்சியுள்ள பகுதியான, 120 கிலோமீட்டர் நீளமுள்ள தூத்துக்குடி–கன்னியாகுமரி சாலையையும் ரூபாய் 190 கோடி மதிப்பீட்டில் இருவழித் தடமாக அகலப்படுத்தி மேம்படுத்தப்படும். இப்பணி வரும் நிதியாண்டில் தொடங்கப்படும்.**

**63. சென்னைப் புறநகர்ப் பகுதிகளின் வளர்ச்சியையும், அதிகரித்துவரும் போக்குவரத்து நெரிசலையும் கருத்தில் கொண்டு, முக்கிய தேசிய நெடுஞ்சாலைகளான சென்னை–திருச்சி நெடுஞ்சாலை, சென்னை–பெங்களூரு நெடுஞ்சாலை மற்றும் சென்னை–கொல்கத்தா நெடுஞ்சாலை ஆகியவற்றை இணைக்கும் வெளி வட்டச் சாலை (Outer Ring Road) ஒன்றை அமைக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டத்தின் முதற்கட்டமாக, ரூபாய் 858 கோடி மதிப்பீட்டில், வண்டலூர்–நசரத்பேட்டை–நெமிலிச்சேரி இடையிலான 30 கிலோமீட்டர் நீளச் சாலையை அமைப்பதற்கான பணிகள் வரும் நிதியாண்டிலேயே தொடங்கப்படும். இதற்காக, இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## மின்சாரம்

**64.** மாநிலத்தின் மின்தேவை கணிசமான அளவு உயர்ந்துள்ளதையும், எதிர்காலத்தில் மேலும் அதிகரிக்க உள்ளதையும் கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டில் கூடுதல் மின் உற்பத்தித் திறனை நிறுவுவதற்கான திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. மேட்டூரில் 600 மெகாவாட் மற்றும் வடசென்னையில் 1200 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட நிலையங்களை அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. பாரத மிகுமின் நிறுவனத்துடன் (BHEL) இணைந்து, தூத்துக்குடி மாவட்டம் உடன்குடியில் 1,600 மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்தி நிலையத்தை நிறுவுவதற்கான பணிகள் விரைவில் தொடங்கப்படும். வரும் நிதியாண்டில், கூடங்குளம் அணுமின் நிலையம் மற்றும் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் விரிவாக்கத்

திட்டம் ஆகியன செயல்படத் தொடங்க இருப்பதால், தமிழகத்தின் மின் உற்பத்தித் திறன் 11,533 மெகாவாட்டாக உயரும்.

65. சென்னையில் உள்ள மின் நுகர்வோர் தாங்கள் செலுத்த வேண்டிய மின் கட்டணத்தை இணைய தளத்தின் மூலம் செலுத்தும் வசதி இந்த நிதியாண்டில் தொடங்கப்பட்டுள்ளது. **வரும் நிதியாண்டில், மாநிலத்தின் இதர பகுதிகளுக்கும் இந்த வசதியை விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும், இராஜீவ் காந்தி ஊரக மின்மயமாக்கல் திட்டத்தின் கீழ், வரும் நிதியாண்டில் ரூபாய் 447 கோடி செலவில் 11,284 மின் மாற்றிகள் மற்றும் 45,911 கிலோ மீட்டர் நீளமுள்ள மின் பாதைகள் ஆகியன புதிதாக அமைக்கப்பட்டு, சுமார் ஐந்தரை இலட்சம் ஊரகக் குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு அளிக்கப்படும்.** குடிசைகள் மற்றும் வழிபாட்டுத் தலங்களுக்கான இலவச மின் இணைப்புகள், வீடுகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கான சலுகைக் கட்டண இணைப்புகள் ஆகியவற்றுக்கான மானியமாக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 1,251 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## போக்குவரத்து

66. இந்த அரசு பொறுப்பேற்றது முதல், கடந்த மூன்று ஆண்டுகளில் அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் இதுவரை 9,248 புதிய பேருந்துகளை வாங்கி இயக்கி வருகின்றன. இவற்றை வாங்குவதற்கு அரசு நிதியுதவியாக ரூபாய் 729 கோடி இந்தப் போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. **மாநில அரசின் நிதியுதவி மற்றும் ஜவஹர்லால் நேரு நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மத்திய அரசின் நிதியுதவி ஆகியவற்றின் மூலமாக, வரும் நிதியாண்டில் மேலும் 3,500 புதிய பேருந்துகள் வாங்கப்படும்.** இதற்கான அரசு நிதியுதவியாக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 250 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## நகராட்சி நிர்வாகம்

**67.** மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில், நகர்ப்புரங்களில் வசிக்கும் மக்களின் விழுக்காடு நாட்டிலேயே மிகவும் அதிகம் உள்ள மாநிலம் தமிழ்நாடு ஆகும். இதைக் கருத்தில் கொண்டு நகர்ப்புரப் பகுதிகளில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு இந்த அரசு உயர் முன்னுரிமை அளித்து வருகிறது. மத்திய மாநில அரசுகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் இணைந்து செயல்படுத்தும் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புரப் புனரமைப்புத் திட்டத்தின் கீழ், இதுவரை ரூபாய் 8,364 கோடி மதிப்பீட்டிலான 223 திட்டங்களுக்கு ஒப்புதல் பெறப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்பட்டுவரும் மூன்றாவது தமிழ்நாடு நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூபாய் 1,374 கோடி மதிப்பீட்டில் 98 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**68.** நகர்ப்புரப் பகுதிகளுக்குத் தேவையான வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்த உள்ளாட்சி அமைப்புகளுக்குப் போதிய நிதியாதாரம் கிடைக்கச் செய்யும் நோக்கத்தோடு, ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையிடமிருந்து ரூபாய் 345 கோடி நிதியுதவியும், ஜெர்மனி நாட்டு கே.எப்.டபிள்யு. நிறுவனத்திடமிருந்து ரூபாய் 500 கோடி நிதியுதவியும் பெறப்பட்டுள்ளது. இந்த நிதியுதவிகளின் மூலமாக இதுவரை ரூபாய் 732 கோடி மதிப்பீட்டிலான 11 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. வரும் நிதியாண்டில் இதற்காக ரூபாய் 170 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**69.** மாநிலத்தில் உள்ள அனைத்து நகராட்சிகளிலும் பாதாளச் சாக்கடைத் திட்டங்களைச் செயல்படுத்துவதென்ற இந்த அரசின் முடிவின்படி, முதற்கட்டமாக தற்போது ஆறு மாவட்டத் தலைநகரங்களில் இப்பணிகள் முடிக்கப்பட்டு, எஞ்சியுள்ள மாவட்டத் தலைநகரங்களில் இப்பணிகளை செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அடுத்த கட்டமாக முக்கிய நகராட்சிகளிலும் இப்பணிகள்

மேற்கொள்ளப்படவுள்ளன. **இதன்கீழ், வரும் நிதியாண்டில் காரைக்குடி, சாத்தூர், மன்னார்குடி, பொள்ளாச்சி, கொடைக்கானல், பெரியகுளம், பழனி, கீழக்கரை, சிவகாசி மற்றும் மேலூர் ஆகிய நகராட்சிகளில் ரூபாய் 408 கோடி மதிப்பீட்டில் பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.**

70. அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ், இதுவரை 280 பேரூராட்சிகளில் ரூபாய் 140 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வரும் நிதியாண்டில் **இத்திட்டத்தின் கீழ், மேலும் 140 பேரூராட்சிகளில் ரூபாய் 70 கோடி மதிப்பீட்டில் அடிப்படை வசதி மேம்பாட்டுப் பணிகள் செயல்படுத்தப்படும்.**

## மெட்ரோ இரயில் திட்டம்

**71. இந்த அரசின் அயராத முயற்சியின் காரணமாக, பிற இந்திய நகரங்களில் மெட்ரோ இரயில் திட்டத்தை நடைமுறைப்படுத்தத் தேவைப்பட்ட காலஅளவைவிட, மிகக் குறைந்த கால அளவில் சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்கு மத்திய அரசிடமிருந்தும், ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு இணையத்திடமிருந்தும் திட்ட ஒப்புதல் மற்றும் நிதியுதவி பெறப்பட்டுள்ளது. இப்பெருந்திட்டம், ‘சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம்’ என்ற பொதுத்துறை நிறுவனம் மூலமாகவே செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்கான மொத்த ஒதுக்கீடாகிய ரூபாய் 14,600 கோடியில், மாநில அரசின் பங்கு ரூபாய் 11,680 கோடியாகவும், மத்திய அரசின் பங்கு ரூபாய் 2,920 கோடியாகவும் இருக்கும். மாநில அரசின் பங்கில், ரூபாய் 8,646 கோடி ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு இணையத்திடமிருந்து பெறப்படும் கடன் தொகையும், ரூபாய் 3,034 கோடி தமிழக அரசின் நிதியுமாகச் செலவிடப்படும். இதற்கான மாநில அரசின் பங்கில், இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 600 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**72. மெட்ரோ இரயில் திட்டத்தின் முதல் பணியாக, கோயம்பேட்டிலிருந்து அசோக்நகர் வரை உயர்த்தப்பட்ட இருப்புப் பாதை அமைப்பதற்கான ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டுள்ளது. எனினும், ஆளுநர் உரையில் அறிவித்தவாறே இத்திட்டத்தில் திருவொற்றியூர் இணைக்கப்படுவதற்கான ஆய்வு மேற்கொள்ளப்பட உள்ளது. இத்திட்டத்திற்கு, விரைவில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் அடிக்கல் நாட்டப்படவுள்ளது.**

## குடிநீர் வழங்கல்

73. சென்ற நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு 2008–2009 ஆம் ஆண்டில், 10,255 ஊரகக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி வழங்க திட்டமிடப்பட்டு இதுவரை 6,092 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி வழங்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள பணிகள் இந்த நிதியாண்டிற்குள் நிறைவேற்றி முடிக்கப்படும். **வரும் நிதியாண்டில் மேலும் 8,000 ஊரகக் குடியிருப்புகளுக்கு, ரூபாய் 700 கோடி மதிப்பீட்டில் குடிநீர்வசதி அளிக்கப்படும்.** நடப்பு நிதியாண்டில், 30 கூட்டுக் குடிநீர் திட்டங்கள் மற்றும் 45 நகரங்களுக்கான குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்களுக்கான பணிகள் நிறைவடையும். **வரும் நிதியாண்டில், மேலும் 30 கூட்டுக் குடிநீர் திட்டங்களும், 50 நகரங்களுக்கான குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்களும் மேற்கொள்ளப்படும்.**

74. ரூபாய் 1,330 கோடி மதிப்பீட்டிலான ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு, ஜப்பானிய பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின் நிதியுதவி பெறப்பட்டுள்ளது. இத்திட்டம் ஏற்கெனவே அறிவித்தவாறு குறித்த காலத்தில் நிறைவுறும். இத்திட்டத்திற்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 200 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. **இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் உள்ள வறண்ட பகுதிகளின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்வதற்கான ரூபாய் 616 கோடி மதிப்பீட்டிலான இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டப்பணிகள் வரும் ஏப்ரல் மாதத்திற்குள் நிறைவு பெறும்.** மொத்தமாக,

குடிநீர் வழங்கல் திட்டங்களுக்காக முன் எப்போதும் இல்லாத அளவில், ரூபாய் 1,064 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## வீட்டு வசதி

75. இந்திரா வீட்டுவசதித் திட்டத்தின் கீழ், கட்டப்படும் வீடுகளின் மதிப்பீட்டை ரூபாய் 25,000 லிருந்து ரூபாய் 35,000 ஆக மத்திய அரசு கடந்த ஆண்டு உயர்த்தியது. இந்த மதிப்பீட்டில் மத்திய அரசின் பங்கு 26,250 ரூபாய் ஆகும். மாநில அரசின் பங்கான 8,750 ரூபாய் மட்டுமல்லாது, கான்கிரீட் கூரை அமைப்பதற்காக தமிழக அரசால் வழங்கப்படும் கூடுதல் உதவியையும், இந்த அரசு ரூபாய் 12,000 லிருந்து ரூபாய் 20,000 ஆக உயர்த்தி வழங்கியதையொட்டி; இத்திட்டத்தில் கட்டப்படும் வீடு ஒன்றிற்கு மத்திய அரசின் பங்கு ரூபாய் 26,250 ஆகவும், மாநில அரசின் பங்கு ரூபாய் 28,750 ஆகவும் உள்ளது. இந்த ஆண்டு தலா ரூபாய் 55,000 மதிப்பீட்டில் 70,000 வீடுகள் ஊரகப் பகுதிகளில் கட்டி அமைக்கப்பட்டு வருகின்றன. **ஏழை எளிய சாமானிய மக்களுக்கு நிரந்தர வீடுகள் அதிக எண்ணிக்கையில் அமைத்துத் தரும் நோக்கத்தோடு, வரும் நிதியாண்டில் முன் எப்போதும் இல்லாத அளவில் ஊரகப் பகுதிகளில் 1,35,000 கான்கிரீட் வீடுகள் ரூபாய் 742 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும். மனித நேயம்மிக்க இந்த மாபெரும் திட்டத்தில் மத்திய அரசின் பங்கு ரூபாய் 354 கோடியாகும். மாநில அரசின் பங்காக ரூபாய் 390 கோடி இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

76. ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புரப் புனரமைப்புத் திட்டத்தின் கீழ், 1,05,373 கான்கிரீட் வீடுகளும், அடுக்குமாடி குடியிருப்புகளும் நகர்ப்புரப் பகுதிகளில் கட்டப்பட்டு வருகின்றன. **வரும் நிதியாண்டில் ஒருங்கிணைந்த வீட்டுவசதி மற்றும் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூபாய் 441 கோடி மதிப்பீட்டில் மேலும் 21,000 புதிய குடியிருப்புகள் நகர்ப்புரப் பகுதிகளில் அமைக்கப்படும்.**

## ஊரக வளர்ச்சி

77. அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதிலும், மாநிலத்தின் வளர்ச்சியிலும் உள்ளாட்சி அமைப்புகள் உரிய பங்காற்றும் வகையில் அவற்றிற்கு கூடுதல் பொறுப்புகளையும், தேவையான அதிகாரங்களையும் வழங்கிட இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. இது குறித்து ஆய்ந்து, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தலைமையிலான உயர்நிலைக் குழு அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில், தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

78. இந்த அரசின் ஒப்புயர்வற்ற சாதனைத் திட்டமான அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ், கடந்த 3 ஆண்டுகளில் ரூபாய் 1,524 கோடி செலவில் 7,585 கிராம ஊராட்சிகளில் அடிப்படை வசதிகள், மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. **இத்திட்டத்திற்காக 2009–2010 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 509 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலமாக, வரும் நிதியாண்டில் மேலும் 2,511 கிராம ஊராட்சிகளில் அடிப்படை வசதி மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.**

79. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டப்பணிகள் மேற்கொள்ளப்படும் கிராம ஊராட்சிகளில் உள்ள சாலைகளும் நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் கீழ், இதுவரை ரூபாய் 884 கோடி மதிப்பீட்டில் 5,000 கிராம ஊராட்சிகளில் உள்ள சாலைகளை மேம்படுத்துவதற்காக ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. **வரும் நிதியாண்டில், மேலும் 2,500 கிராம ஊராட்சிகளில் உள்ள சாலைகள் ரூபாய் 401 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும். இந்தச் சாலை மேம்பாட்டுப் பணிகளுக்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 350 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**80.** தேவையான வளர்ச்சிப் பணிகளை மக்களே தேர்ந்தெடுத்து, அவர்களின் பங்களிப்போடு பணிகளைச் செயல்படுத்த வழிவகுக்கும் 'நமக்கு நாமே திட்டம்', இந்த அரசால் மீண்டும் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை **3,333** பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கான அரசின் பங்களிப்பாக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் **50** கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**81.** தந்தை பெரியார் அவர்களின் சமத்துவக் கொள்கையைப் பரப்பும் வகையில், அவரது திருவுருவச் சிலையுடன் கூடிய **95** சமத்துவபுரங்கள் **3** ஆண்டு காலத்தில் அமைக்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் அறிவித்ததற்கேற்ப, **29** சமத்துவபுரங்கள் தற்போது அமைக்கப்பட்டு வருகின்றன. **வரும் நிதியாண்டில் மேலும் 29 புதிய சமத்துவபுரங்கள் அமைக்கப்படும். இதற்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 75 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**82.** திருமதி சோனியா காந்தி அவர்களின் வழிகாட்டுதலோடு – மாண்புமிகு மன்மோகன்சிங் அவர்களின் தலைமையில் நடைபெறும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் சாதனைத் திட்டமான, தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தை செயல்படுத்துவதில் நமது நாட்டிலேயே முன்னணி மாநிலமாகத் தமிழகம் திகழ்ந்து வருகிறது. இத்திட்டத்தின் கீழ் பணிபுரிவோருக்குக் குறைந்தபட்ச ஊதியம் உறுதி செய்யப்பட்டு, பயனாளிகளுக்கு நமது மாநிலத்தில் உடனடியாக ஊதியம் வழங்கப்பட்டு வரும் முறை குறித்து அனைவரும் பாராட்டியுள்ளனர். இந்த வகையில், தேசிய அளவில் சிறந்த செயல்பாட்டிற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட **22** மாவட்டங்களில், திண்டுக்கல், சிவகங்கை மற்றும் கடலூர் ஆகிய தமிழகத்தின் மூன்று மாவட்டங்கள் இடம் பெற்றுள்ளன என்பது மனநிறைவளிக்கிறது. சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள ஆதிதிராவிடர்களுக்கும் ஏழைப் பெண்களுக்கும் பெரிதும் பயனளித்துள்ள இத்திட்டத்தின் கீழ், இதுவரை ரூபாய் **1,412** கோடி

ஊதியமாக வழங்கப்பட்டுள்ளது. **வரும் நிதியாண்டில் ரூபாய் 1,750 கோடி மதிப்பீட்டில் அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும்.**

83. **மூன்றாவது மாநிலக் குழுவின் பரிந்துரைகளை ஏற்று இந்த அரசு அறிவித்ததற்கேற்ப, மாநில அரசின் சொந்த வரி வருவாயில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிதிப்பங்கீடு, தற்போதுள்ள 9 சதவீதத்திலிருந்து வரும் நிதியாண்டில் 9.5 சதவீதமாக உயர்த்தப்படும். இதனால் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வரும் நிதியாண்டில் கூடுதலாக ரூபாய் 187 கோடி கிடைக்கும்.** நிதிப்பங்கீடு (Devolution) நேரடியாக மாற்றப்படும் வருவாய் (Assigned Revenue) மற்றும் திட்டங்களுக்கான நிதியுதவி (Assistance for Scheme) ஆகியவற்றின் கீழ் நடப்பு நிதியாண்டில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு ரூபாய் **6,241** கோடி வழங்கப்பட்டுள்ளது. வரும் நிதியாண்டில் இது ரூபாய் **6,928** கோடியாக உயர்த்தப்படும். இது தவிர தொடக்கக் கல்வி, குடிநீர் வழங்குதல், பொதுச் சுகாதாரம் போன்ற அடிப்படை வசதிப் பணிகளை உள்ளாட்சி அமைப்புகள் சார்பாக அரசே மேற்கொள்வதற்கான செலவினங்களையும் சேர்த்து, இந்த அமைப்புகளுக்கு அளிக்கப்படும் நேரடி நிதியுதவி மற்றும் அவை மேற்கொள்ளவேண்டிய பணிகளுக்காக, மாநில அரசு செலவிடும் மொத்தத் தொகை, மாநிலத்தின் சொந்த வரி வருவாயில் சுமார் **31** சதவீதமாகும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் கவனிக்க வேண்டுகிறேன்.

## வருவாய் நிருவாகம்

84. **நீண்டகாலமாக நடைமுறையில் இருந்துவரும் தற்போதைய நிலவரி வசூல் முறையில், நிலவரியோடு சேர்த்து தலவரி, தலமேல்வரி, தண்ணீர் தீர்வை போன்றவையும் வசூலிக்கப்பட்டு வருகின்றன. இந்த வரிகள் அனைத்தும் சேர்ந்து விவசாயிகளுக்கு நில உடைமைக்குச் சான்றாக விளங்கத்தக்க வகையில் 'நிலவரி' என்ற பெயரால் இனி பெயரளவிற்கு மட்டுமே வசூலிக்கப்படும். சிக்கலான தற்போதைய**

**முறையை எளிமைப்படுத்தி, வரும் பசலி ஆண்டிலிருந்து, புன்செய் நிலங்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு சராசரியாக தற்போது வசூலிக்கப்பட்டுவரும் 15 ரூபாய் தொகையை, இனி ஏக்கர் ஒன்றுக்கு இரண்டு ரூபாய் என்றும், நன்செய் நிலங்களுக்கு சாராசரியாக தற்போது வசூலிக்கப்பட்டுவரும் ரூபாய் 50 என்பதை இனி ஏக்கர் ஒன்றுக்கு 5 ரூபாய் என்றும் குறைத்து வசூலிக்கப்படும். தலவரி, தலமேல்வரி என்று இனி எந்த வரியும் விவசாயிகளின் தலையில் சுமத்தப்பட மாட்டாது. இதனால் 50 இலட்சம் விவசாயிகள் பயன் பெறுவர்.**

**85.** இந்த அரசு ஏற்கெனவே அறிவித்தவாறு ரூபாய் 45 கோடி மதிப்பீட்டில், வருவாய்த் துறைக்குத் தேவையான அலுவலகங்கள் மற்றும் குடியிருப்புகளைக் கட்டுவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளுக்காக வரும் நிதியாண்டில் ரூபாய் 34 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மொத்தமாக, வருவாய்த் துறைக்கான நிதி ஒதுக்கீடு இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 2,416 கோடியாக உயர்ந்துள்ளது.

## மகளிர் நலன்

**86.** கருவுற்றிருக்கும் பெண்களுக்கு சத்தான உணவு கிடைக்கச்செய்ய அவர்களுக்கு மகப்பேறுகால உதவியாக ரூபாய் 6,000 வழங்கிடும் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. முதலில் இருந்த விதிமுறைகளின்படி குடும்ப வருமானச் சான்றிதழ் பெறுவதற்கு கர்ப்பிணிப் பெண்கள் சிரமப்பட வேண்டியுள்ளதைக் கருத்தில் கொண்டு, வருமானச் சான்றிதழின்றி கிராம மருத்துவச் செவிலியர்களின் பரிந்துரைகளின் அடிப்படையிலேயே அவர்கள் மகப்பேறு உதவி பெறவும் இந்த அரசு ஆணையிட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், இதுவரை சுமார் 10 இலட்சம் தாய்மார்கள் பயன்பெற்றுள்ளனர். **வரும் நிதியாண்டில் மேலும் 4 இலட்சத்திற்கும் மேற்பட்ட தாய்மார்கள் பயனடையும் வகையில் இத்திட்டத்திற்கு ரூபாய் 250 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

87. இந்த அரசு பொறுப்பேற்ற பின், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண உதவித் திட்டத்தை மீண்டும் செயல்படுத்தியதோடு, இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உதவித் தொகையை ரூபாய் 10,000 லிருந்து ரூபாய் 20,000 ஆக, இருமடங்காக உயர்த்தி வழங்கி வருகிறது. ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்களின் வாழ்வில் ஒளியேற்றி வரும் இத்திட்டத்தின் கீழ், இதுவரை இரண்டு இலட்சம் ஏழைப் பெண்கள் பயன்பெற்றுள்ளனர். **வரும் நிதியாண்டில் மேலும் 75,000 ஏழைப் பெண்கள் பயன்பெறும் வண்ணம், இந்த வரவு–செலவுத் திட்டத்தில் இதற்காக ரூபாய் 150 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

88. ஏழை மற்றும் நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கு உதவும் வகையில், சமையல் எரிவாயு இணைப்பு இல்லாத குடும்பங்களுக்கு இலவச எரிவாயு அடுப்பும், சமையல் எரிவாயு இணைப்பும் வழங்கும் திட்டத்தை இந்த அரசு தொடங்கிச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ், இதுவரை 10,84,866 குடும்பங்களுக்கு இலவச எரிவாயு அடுப்புகளும், இலவச எரிவாயு இணைப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. **வரும் நிதியாண்டிலும் மேலும் 6 இலட்சம் எரிவாயு அடுப்புகள் மற்றும் இணைப்புகள் வழங்க, ரூபாய் 140 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

89. 1989 ஆம் ஆண்டு இந்த அரசால் தொடங்கப்பட்ட மகளிர் சுயஉதவிக் குழு இயக்கம், இன்று ஆல் போல் தழைத்து மாநிலமெங்கும் 62 இலட்சம் உறுப்பினர்கள் உள்ள 3,91,000 சுயஉதவிக் குழுக்களைக் கொண்ட மாபெரும் இயக்கமாக வளர்ந்துள்ளது. இவற்றில் 2,74,000 குழுக்கள் கிராமப்புர பகுதிகளிலும், 1,17,000 குழுக்கள் நகர்ப்புரப் பகுதிகளிலும் இயங்கி வருகின்றன. இக்குழுக்களை ஊக்கப்படுத்தும் வகையில், முதல் முறையாக நகர்ப்புரங்களில் உள்ள சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல்நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதோடு, ரூபாய் 150 கோடி செலவில் தகுதியுடைய அனைத்து சுயஉதவிக் குழுக்களுக்கும்

சுழல்நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில், ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த பல பெண்கள் இன்னும் இந்த இயக்கத்தில் உறுப்பினர்களாகச் சேர்ந்து பயனடைய இயலாதிருப்பது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. **வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள பெண்கள் அனைவரும் சுயஉதவிக் குழு இயக்கத்தில் சேர்ந்து பயனடைய வேண்டுமெனில், சுமார் ஒரு இலட்சம் புதிய சுயஉதவிக் குழுக்கள் நமது மாநிலத்தில் அமைக்கப்பட வேண்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதனை வரும் இரண்டு ஆண்டுகளில் எய்தும் வகையில், 2009–2010 ஆம் ஆண்டில் 50 ஆயிரம் புதிய சுயஉதவிக் குழுக்களும், 2010–2011 ஆம் ஆண்டில் மேலும் 50 ஆயிரம் சுயஉதவிக் குழுக்களும் அமைக்கப்படும். இப்பணி நிறைவடைந்த பின், நமது நாட்டிலேயே வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் அனைத்து மகளிரையும் சுயஉதவிக் குழு இயக்கத்தில் உறுப்பினர்களாக இடம்பெறச் செய்த முதல் மாநிலம் என்ற பெருமையை தமிழகம் பெறும்.**

**90.** ஊராட்சி அளவிலான இணையங்களில் உறுப்பினர்களாக உள்ள சுயஉதவிக் குழுக்கள், எளிதில் வங்கிக் கடன் பெற்று நல்ல பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலும் என்பதை இந்த அரசு உணர்ந்துள்ளது. இதற்காக, இத்தகைய இணையங்களை அமைத்து அவற்றிற்குத் தேவையான உதவிகளையும், திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளையும் இந்த அரசு கடந்த மூன்று ஆண்டுகளாக அளித்து வருகிறது. **இந்த இணையங்களை மேலும் ஊக்கப்படுத்தும் வகையில், நமது மாநிலத்தில் சிறப்பாகச் செயல்படும் 1,000 ஊராட்சி அளவிலான இணையங்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு ஊக்கத் தொகையாக தலா ஒரு இலட்சம் அளிக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக ரூபாய் 10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## முதியோர் மற்றும் ஆதரவற்றோர் நலன்

**91.** இந்த அரசு பொறுப்பேற்றவுடன் முதியோர் மற்றும் ஆதரவற்றோருக்கு வழங்கப்படும் மாதாந்திர உதவித் தொகையை ரூபாய்

200 லிருந்து ரூபாய் 400 ஆக உயர்த்தியது. இத்துடன் மத்திய அரசு உதவியுடன், வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள அனைவருக்கும் உதவித் தொகை வழங்கும் இந்திரா காந்தி தேசிய முதியோர் ஓய்வூதியத் திட்டத்தையும் மத்திய அரசுடன் இணைந்து சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்களினால் 7,39,541 முதியோரும், 7,90,041 ஆதரவற்றோரும் பயனடைந்து வருகின்றனர். கடந்த 3 ஆண்டுகளில் இந்த அரசு வழங்கியுள்ள இத்தகைய சலுகைகளினால், முதியோர் மற்றும் ஆதரவற்றோருக்கான ஓய்வூதியச் செலவினம் 2005–2006 ஆம் ஆண்டு ரூபாய் 303 கோடியிலிருந்து, 2009–2010 ஆம் ஆண்டில் ரூபாய் 911 கோடியாக உயர்ந்துள்ளது.

92. **வயது முதிர்ந்தோருக்குத் தேவையான தனி சிகிச்சைகளை அளிக்கவும், அவை குறித்து ஆராய்ச்சி மேற்கொள்ளவும் வசதிவாய்ப்புகள் கொண்ட தேசிய வயது முதிர்வு ஆராய்ச்சி மையம், மத்திய அரசின் நிதியுதவியுடன், சென்னையில் உள்ள கலைஞர் கருணாநிதி நகரில் ரூபாய் 112 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

## ஊனமுற்றோர் நலன்

93. ஊனமுற்றோர் நலனுக்காக இந்த அரசு தனி நலவாரியம் ஒன்றை அமைத்து, சட்டம் இயற்றி அனைத்து நல உதவிகளும் தொடர்ந்து வழங்கப்பட ஆவன செய்துள்ளது. ஊனமுற்றோருக்கு வழங்கப்படும் உதவித் தொகை ரூபாய் 200 லிருந்து ரூபாய் 400 ஆகவும், கடும் ஊனமுற்றோருக்கு வழங்கும் உதவித் தொகை ரூபாய் 200 லிருந்து ரூபாய் 500 ஆகவும் உயர்த்தப்பட்டு, 10,000 ஊனமுற்றோர் பயனடைந்துள்ளனர். இது தவிர, தசைச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளோருக்கும் மாதாந்திர உதவித் தொகையாக ரூபாய் 500 வழங்கப்பட்டு வருகிறது. **ஊனமுற்றோர் சுயதொழில் புரிய உதவும் வகையில் அவர்களுக்கு வரும் நிதியாண்டில் மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள் இலவசமாக வழங்கப்படும்.** ஊனமுற்றோருக்கு

வழங்கப்படும் பல்வேறு உதவித் தொகைகளுக்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 75 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## மனவளர்ச்சி குன்றியோர் நலன்

**94.** தங்களைத் தாங்களே பராமரித்துக்கொள்ளக் கூட இயலாத மனவளர்ச்சி குன்றியோருக்கு, எண்ணிக்கை வரையறை மற்றும் வருமான உச்ச வரம்பின்றி மாதாந்திர உதவித் தொகை வழங்கிட ஆணையிடப்பட்டு, தமிழ்நாட்டில் உள்ள சுமார் 20,000 மனவளர்ச்சி குன்றியோர், பராமரிப்பு உதவித் தொகையாக மாதந்தோறும் ரூபாய் 500 பெற்று வருகின்றனர். இவர்களுக்கு ஆரம்ப நிலையிலேயே பயிற்சி அளிப்பதற்கும், சிறப்புப் பள்ளிகள் மூலம் அடிப்படைக் கல்வி புகட்டுவதற்கும் அரசு சாரா தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

## அரவாணிகள் நலன்

**95.** திருநங்கையர் எனப்படும் அரவாணிகளின் துயர் துடைக்க அவர்களுக்கென தனி நலவாரியம் அமைத்தும், குடும்ப அட்டைகள் வழங்கியும், வேலைவாய்ப்புப் பயிற்சி அளித்தும் இந்த அரசு பல்வேறு உதவிகளை வழங்கி வருகிறது. இது மட்டுமன்றி, அவர்கள் தனியாகவோ அல்லது இணைந்து சுய உதவிக் குழுக்களாகவோ தொழில் துவக்குவதற்கான உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. **வீட்டுவசதியின்றி இருக்கும் அவர்களுக்கு ரூபாய் ஒரு கோடி மதிப்பீட்டில், வரும் நிதியாண்டில் தொகுப்பு வீடுகள் கட்டித்தரப்படும்.**

## நெசவாளர் நலன்

**96.** கைத்தறி நெசவாளர்களுக்குக் கூடுதலாக வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், ஏழை எளியோருக்குப் பொங்கல் திருநாளையொட்டி, இலவச வேட்டி மற்றும் சேலைகள் வழங்கும் திட்டம் வரும் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதற்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 256 கோடி ஒதுக்கீடு

செய்யப்பட்டுள்ளது. கைத்தறி நெசவாளர்களுக்கு தனி நலவாரியம் அமைக்கப்பட்டுள்ளதோடு, முதுமையடைந்த நெசவாளர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத் தொகையும் ரூபாய் 200 லிருந்து ரூபாய் 400 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

97. கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கும் இந்த அரசின் திட்டம் தொய்வின்றித் தொடரும். இது தவிர, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும் வட்டி மானியம் மீண்டும் வழங்கப்பட்டு, வட்டி வீதம் 12 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களுக்காக ரூபாய் 90 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## மீனவர் நலன்

98. மீனவர்களின் நலனில் இந்த அரசு தனி அக்கறை கொண்டுள்ளது. மீன் பிடிக்கச் செல்லும்போது காணாமல் போகும் மீனவர்களின் குடும்பத்திற்கு நிதியுதவி அளிக்கும் திட்டத்தையும், கடலில் மீன் பிடிக்கச்செல்ல தடை உள்ள காலங்களில் மீனவக் குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தையும் இந்த அரசு தொடங்கி செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்களுக்காகவும், பருவமழைக் காலங்களில் வழங்கப்படும் நிவாரண உதவிக்காகவும், இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 42 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

99. சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு 37,947 மிதிவண்டிகளும், 1,20,306 உயிர் காக்கும் கவசங்களும் வழங்கப்பட்டுள்ளன. மேலும், மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்கு தளங்களை மேம்படுத்துவதற்கான பணிகளுக்கு ரூபாய் 30 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. **மேலும், கன்னியாகுமரி மாவட்டம், தேங்காய்பட்டினத்தில் ரூபாய் 40 கோடி மதிப்பீட்டில் புதிய மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்படும்.**

## கைவினைஞர் நலன்

100. கைவினைஞர்களுக்கென தனி நலவாரியம் ஒன்றை அமைத்து, அவர்களுக்கு பல்வேறு உதவிகளை வழங்கி வருகிறோம். **அவர்களுக்கு கலைப் பொருட்களை வடிவமைக்கத் தேவையான தரமான மூலப்பொருட்கள் நியாயமான விலையில் கிடைக்கச் செய்ய, சுவாமிமலையில் மூலப்பொருள் வங்கி ஒன்று அமைக்கப்படும்.**

## சிறு வணிகர் நலன்

101. சிறு வணிகர்களுக்குக் கடன் அட்டைகள் வழங்கி, அவர்களை சுயஉதவிக் குழுக்களாக ஒருங்கிணைத்து, கூட்டுறவு வங்கிகள் மூலமாக அவர்கள் கடன் பெற்றிட இந்த அரசு ஆவன செய்துள்ளது. **பாதையோர வணிகர்கள், பொருட்களைக் கூடைகளில் சுமந்தோ அல்லது வண்டிகளில் வைத்தோ விற்போர், வெற்றிலை பாக்கு கடை வைத்திருப்போர் போன்ற சிறு வணிகர்களுக்கென, தனி நலவாரியம் ஒன்றை அமைத்து இந்த அரசு நலத் திட்ட உதவிகளை வழங்கும்.**

## பத்திரிகையாளர் நலன்

102. பத்திரிகைத் துறையில் பணியாற்றி ஓய்வுபெற்ற பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத்தையும், அவர்களது குடும்பத்தினர் பெறும் குடும்ப ஓய்வூதியத்தையும் இந்த அரசு உயர்த்தி வழங்கியுள்ளது. மேலும், ஒரு கோடி நிதி வழங்கி, பத்திரிகையாளர் நல நிதியத்திலிருந்து கடும் நோய்வாய்ப்படும் பத்திரிகையாளர்களின் மருத்துவச் சிகிச்சைக்கு நிதியுதவி அளிக்கப்படவும் இந்த அரசு ஆவன செய்துள்ளது. பணிபுரியும் பத்திரிகையாளர்களுக்கு சென்னை, வேலூர், திருச்சி, திண்டுக்கல் மற்றும் சேலத்தில் சலுகை விலையில் வீட்டுமனைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், அவர்களின் மற்ற கோரிக்கைகளை ஆய்வு செய்து ஆவன செய்யப்படும்.

## அமைப்புசாராத் தொழிலாளர் நலன்

**103. 1996–2001** ஆம் ஆண்டு காலத்தில் இந்த அரசால் அமைக்கப்பட்டு, பின்னர் கலைக்கப்பட்ட நல வாரியங்களை மீண்டும் அமைத்து, **39** இலட்சம் உறுப்பினர்கள் பதிவுசெய்யப்பட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. தொழிலாளர் நல துறையின் மூலமாக இயங்கும் இந்த வாரியங்கள் வாயிலாக இதுவரை ரூபாய் **105** கோடி அளவிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கான அரசு உதவியாக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் **30** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## பனைத் தொழிலாளர் நலன்

**104.** பனைத் தொழில் செய்வோருக்குத் தேவைப்படும் தொழிற் கருவிகள் வாங்க நிதியுதவி அளித்தும் அவர்களுக்கெனத் தனி நலவாரியம் ஒன்றை அமைத்தும் இந்த அரசு உதவியுள்ளது. வரும் ஆண்டில் இராமநாதபுரம் மாவட்டம் சாயல்குடியில் உள்ள பதநீர் விற்பனை நிலையத்திற்கு, பதநீர் குளிர்பதன இயந்திரம் வழங்கப்படும்.

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்

**105.** ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்கள், கல்வி மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் பெற்று, உரிய வேலைவாய்ப்புகளை அடைந்தால் மட்டுமே அவர்களின் வாழ்க்கைத் தரமும், சமூகப் பொருளாதார நிலையும் உயரும். இதைக் கருத்தில் கொண்டு, கடந்த இரண்டு ஆண்டுகளாக மாநில அரசின் சிறப்பு நிதி உதவியாக ஆண்டுதோறும் ரூபாய் **25** கோடி ஒதுக்கி, இந்த இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள், தேசிய அளவில் நடத்தப்படும் பல்வேறு பட்ட மேற்படிப்புத் தேர்வுகளில் வெற்றி பெறுவதற்கான சிறப்புப் பயிற்சிகள் போன்றவை அளிக்கப்பட்டு வருகின்றன. வரும் **2009–2010** ஆம் நிதி ஆண்டிலும் இத்திட்டத்திற்கு ரூபாய் **25** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**106.** மாநில அரசின் கல்வி உதவித் தொகை பெறுவதற்கான வருவாய் உச்சவரம்பு ரூபாய் **50,000** லிருந்து ரூபாய் **1** இலட்சமாக உயர்த்தப்பட்டு, நடப்பு நிதியாண்டில் மூன்று இலட்சம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகையாக ரூபாய் **177** கோடி வழங்கப்பட்டுள்ளது. **தனியார் கட்டடங்களில் இயங்கிவரும் 25 மாணவரில்லங்களுக்கு ரூபாய் 12.5 கோடி மதிப்பீட்டில் சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும்.**

**107.** ஆதிதிராவிடர் குடியிருப்புப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் திட்டம், ரூபாய் **111** கோடி மதிப்பீட்டில் நபார்டு வங்கியின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் **61** கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## தூய்மைப் பணிபுரிவோர் நலன்

**108.** ஆதிதிராவிடர்களுள் மிக மிகப் பின்தங்கியுள்ள அருந்ததியர் வகுப்பினரின் முன்னேற்றத்திற்குச் சிறப்புச் சலுகைகள் அவசியம் என்ற அடிப்படையில், தற்போது ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப்பட்டு வரும் இட ஒதுக்கீட்டில் அருந்ததியர்களுக்கு தனி உள் ஒதுக்கீடு வழங்குவது குறித்து ஆராய நீதியரசர் திரு. எம்.எஸ். ஜனார்தனம் அவர்களை கொண்ட ஒரு நபர் குழுவை அமைத்து, அக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில் **3** சதவீத உள் ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த இந்த அரசு முடிவு செய்துள்ளது. **இதற்கான சட்டமுன்வடிவு இந்த வரவு–செலவுத் திட்டக் கூட்டத் தொடரிலேயே கொண்டு வரப்படும்.**

**109.** தூய்மைப் பணிகளில் ஈடுபட்டுள்ளோரின் நலன் கருதி அவர்களுக்கென தனி நலவாரியம் ஒன்று அமைக்கப்பட்டு, நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருவதோடு, மனிதக் கழிவை அகற்றித் தூய்மைப்படுத்தும் பணிகளில் முன்னர் ஈடுபட்டிருந்தோருக்கு மாற்றுத்

தொழிலில் ஈடுபட உதவுவதற்காக ரூபாய் 22 கோடி மதிப்பீட்டிலான மறுவாழ்வுத் திட்டமும் இந்த அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. **இப்பணியாளர்கள் கழிவுநீர்க் குழாய்களில் இறங்கிப் பணிபுரிவதைத் தவிர்க்க, சென்னை மாநகராட்சியிலும், மற்ற 9 நகராட்சிகளிலும் பயன்படுத்துவதற்கு ரூபாய் 6.3 கோடி மதிப்பீட்டில் அடைப்புகளை அகற்றும் இயந்திரங்கள் வரும் நிதியாண்டில் வாங்கப்படும்.**

**110.** ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் முன்னேற்றத்திற்காக, மாநில அரசின் திட்டப்பணிகளில் பிரித்தளிக்கக் கூடியவற்றில், ஆதிதிராவிடர் துணைக்கூறுத் திட்டத்திற்கென (Scheduled Caste Sub Plan) தனி ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 2005–2006 ஆம் ஆண்டில் ரூபாய் 567 கோடியாக இருந்த இந்த ஒதுக்கீடு, வரும் 2009–2010 ஆம் நிதியாண்டில் ரூபாய் 2,615 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

## பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்

**111.** பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவர்கள் கல்வி உதவித் தொகை பெறுவதற்கான, பெற்றோரின் ஆண்டு வருமான உச்சவரம்பை ரூபாய் 50,000 லிருந்து ரூபாய் ஒரு இலட்சமாக இந்த அரசு உயர்த்தியது. இந்த மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகைக்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 82 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், பள்ளி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர உணவுப் படியை ரூபாய் 450 ஆகவும், கல்லூரி விடுதிகளில் உள்ளவர்களுக்கு ரூபாய் 550 ஆகவும் இந்த அரசு சென்ற ஆண்டு உயர்த்தி வழங்கியது. இதனால், 66,652 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். **ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த இந்த மாணவர்களுக்கு உதவும் வகையில், தனியார் கட்டடங்களில் இயங்கி**

**வரும் 25 மாணவரில்லங்களுக்கு, ரூபாய் 12.5 கோடி மதிப்பீட்டில் சொந்தக் கட்டடங்கள் கட்டித் தரப்படும்.**

**112.** பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின இளைஞர்கள் தகுந்த வேலைவாய்ப்புகளைப் பெற அவர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கும் திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. **இத்திட்டத்தின் கீழ் வரும் நிதியாண்டில் மேலும் 10,000 இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். இதற்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.** மொத்தமாக, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு வரும் நிதியாண்டில் ரூபாய் 435 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## சிறுபான்மையினர் நலன்

**113.** சமூகப் பொருளாதார மற்றும் கல்வி நிலையில் பின்தங்கியுள்ள சிறுபான்மையினரான இஸ்லாமியர்களுக்குக் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் 3.5 சதவீத இட ஒதுக்கீட்டை வழங்கியதோடு, சிறுபான்மையினர் முன்னேற்றத்தில் தனிக் கவனம் செலுத்துவதற்காக, சிறுபான்மையினருக்கான தனி இயக்குநரகம் ஒன்றையும் இந்த அரசு ஏற்படுத்தியுள்ளது. சிறுபான்மையின இளைஞர்கள் வேலைவாய்ப்புகளைப் பெறத் தேவையான திறன் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டத்தின் கீழ் சுமார் 8,000 இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. **வரும் நிதியாண்டில் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம், 10,000 சிறுபான்மையினருக்கு ரூபாய் 30 கோடி கடனுதவி வழங்கப்படும். மேலும், மாநிலத்தில் உள்ள பள்ளிவாசல்கள், தர்காக்கள் மற்றும் மதரஸாக்களில் உள்ள உலமாக்கள் மற்றும் பணியாளர்களுக்கென, 'உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரியம்' ஒன்று அமைக்கப்படும்.**

## குழந்தைகள் நலன்

**114.** தமிழ்நாட்டில் சத்துணவுத் திட்டத்தில் மதிய உணவு உண்ணும் 73 இலட்சம் குழந்தைகளுக்கு, வாரம் 3 முறை முட்டையும், முட்டை உண்ணாத குழந்தைகளுக்கு வாழைப்பழமும், இந்த அரசு வழங்கி வருகிறது. கடந்த 3 ஆண்டுகளாக, குழந்தைகளும், உணவு சமைக்கும் பணியாளர்களும் புகையால் பாதிக்கப்படாமல் இருக்க சமையல் அறைகளை நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ் 1,850 சத்துணவு மையங்கள், 5,940 குழந்தைகள் மையங்களுக்கு ரூபாய் 805 இலட்சம் செலவில் எரிவாயு அடுப்பு, பிரஷர்குக்கர் ஆகியன வழங்கப்பட்டு வருகின்றன. **வரும் நிதியாண்டில் 224 இலட்சம் செலவில், மேலும் 350 சத்துணவு மையங்களுக்கும், 2,000 குழந்தைகள் மையங்களுக்கும் இவை வழங்கப்படும்.** மொத்தமாக சத்துணவுத் திட்டத்திற்கு ரூபாய் 830 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**115.** குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் வளர் இளம் பெண்களுக்கு ஊட்டச்சத்துள்ள உணவை அளித்துவரும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் பயன்களை, மேலும் அதிக எண்ணிக்கையிலானோர் பெறும் வகையில், புதிதாக 1539 குழந்தைகள் மையங்களும், 3168 குழந்தைகள் குறு மையங்களும் இந்த அரசால் தொடங்கப்பட்டுள்ளன. பள்ளிகளிலும் குழந்தைகள் மையங்களிலும் உணவு உட்கொள்ளும் குழந்தைகளுக்கு முட்டை வழங்கும் திட்டத்தின் கீழ் 73 இலட்சம் குழந்தைகள் பயன்பெறுகின்றனர். இத்திட்டத்திற்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 176 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## தமிழ் வளர்ச்சி

**116.** தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் பயிலும் மாணவர்களும், தமிழ்மொழியைக் கற்பதை உறுதி செய்திடவும், தமிழ்மொழி செம்மொழி என்பதை மத்திய அரசு அறிவிக்கச் செய்யவும்,

தமிழ்ச் செம்மொழி ஆய்வுக்கான மத்திய நிறுவனத்தைச் சென்னையில் அமைத்திடவும், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் எடுத்திட்ட அயராத முயற்சிகள் வெற்றியடைந்திருப்பது நம் அனைவருக்கும் மன நிறைவையும், மகிழ்ச்சியையும் அளிக்கிறது. தமிழ் மொழியை மத்திய அரசில் ஆட்சி மொழிகளுள் ஒன்றாக அறிவிக்கச் செய்யவும், சென்னை உயர்நீதிமன்றத்தில் அனைத்து நடவடிக்கைகளிலும் தமிழையும் வழக்கு மொழியாக்கவும் இந்த அரசு தொடர்ந்து பாடுபடும்.

**117.** தமிழ் மொழி வளர்ச்சிக்கும், தமிழர் மேன்மைக்கும் பாடுபட்டுள்ள தூய தமிழ்ச் சான்றோர்களின் கருத்துகளும், சிந்தனைகளும் இன்று வளரும் தலைமுறைக்கு மட்டுமன்றி வரும் தலைமுறைகளுக்கும் பயனளிக்க வேண்டும் என்னும் விழைவோடு, தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கும் திட்டம் தமிழக அரசால் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வகையில் இதுவரை 95 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன. இவர்களில் திராவிட முன்னேற்றக் கழக அரசு மட்டும் 87 தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கியுள்ளது. 2006இல் இந்த அரசு பொறுப்பேற்றபின், பரிதிமாற்கலைஞர், புலவர் குழந்தை, முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம், இலக்குவனார், பேராசிரியர் க.வெள்ளைவாரணனார், டாக்டர் ரா.பி.சேதுப்பிள்ளை, வ.சுப.மாணிக்கம் முதலான 65 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு, அவர்களின் மரபுரிமையர்க்குப் பரிவுத் தொகையாக 4 கோடியே 86 இலட்சம் ரூபாய் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. **அதன் தொடர்ச்சியாக இந்த ஆண்டு குழந்தை கவிஞர் அழ.வள்ளியப்பா, கவியரசு கண்ணதாசன், பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை, பண்டிதமணி மு.கதிரேசஞ் செட்டியார், மு.இராகவையங்கார், பம்மல் சம்பந்தனார், அ.சிதம்பரநாதன் செட்டியார், மு.சு.பூரணலிங்கம் பிள்ளை, தொ.மு.பாஸ்கரத் தொண்டைமான், பாலூர் கண்ணப்ப முதலியார், இராய.சொக்கலிங்கனார், டாக்டர் மு.வரதராசனார், முனைவர் ச.அகத்தியலிங்கம், பாவலர் நாரா.நாச்சியப்பன், புலியூர்க் கேசிகன், எழுத்தாளர் சாண்டில்யன்,**

**எழுத்தாளர் வை.மு.கோதைநாயகி, சின்ன அண்ணாமலை, பூவை. எஸ்.ஆறுமுகம், என்.வி.கலைமணி, கவிஞர் முருகு சுந்தரம், புலவர் த.கோவேந்தன், எழுத்தாளர் சுந்தர ராமசாமி, திருக்குறள்மணி அ.க.நவநீத கிருட்டிணன், இலட்சுமி, வடுவூர் துரைசாமி ஐயங்கார், ஜமதக்னி மற்றும் ஜெ.ஆர்.ரங்கராஜு ஆகிய 28 தமிழ்ச் சான்றோர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு, அவர்கள் உருவாக்கிய நூல்களின் எண்ணிக்கை, அவை சமுதாயத்தில் ஏற்படுத்திய தாக்கம், அவற்றின் பெருமை ஆகியவற்றின் அடிப்படையில் அவர்தம் மரபுரிமையருக்குப் பரிவுத் தொகை வழங்கப்படும்.**

## சுற்றுலா

**118.** தமிழகத்தில் உள்ள பல முக்கிய சுற்றுலாத் தலங்கள் கடந்த மூன்று ஆண்டுகளில் ரூபாய் 67 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. மதுரை, கன்னியாகுமரி, தஞ்சாவூர், திருவரங்கம், ஏலகிரி, இராமேஸ்வரம், சப்தவிடங்கத் திருத்தலங்கள், நீலகிரி, கொடைக்கானல், கோவைக் குற்றாலம், முதுமலை, ஆனைமலை, செட்டிநாடு, புளியஞ்சோலை, வேலூர் கோட்டை ஆகிய இடங்களில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவை தவிர, தரங்கம்பாடி, பழவேற்காடு, கொல்லிமலை, மாமல்லபுரம், குற்றாலம், திருச்செந்தூர், ஒகேனக்கல் ஆகிய இடங்களில், ரூபாய் 29 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. **வரும் நிதியாண்டில் வால்பாறை, கல்லணை, ஏற்காடு, திருவானைக்காவல், திருவில்லிபுத்தூர், சிக்கல், வேளாங்கண்ணி மற்றும் நாகூர் ஆகிய சுற்றுலாத் தலங்கள் மேம்படுத்தப்படும்.** மேலும், முக்கிய சுற்றுலாத் தலங்களுக்குச் செல்லும் சாலைகளை மேம்படுத்துவதற்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## வனம் மற்றும் சுற்றுச்சூழல்

**119.** தமிழ்நாட்டில் உள்ள வனப் பகுதிகளை மேம்படுத்த, ரூபாய் 567 கோடி மதிப்பீட்டில் ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கியின்

நிதியுதவியுடன் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. **இத்திட்டத்தின் கீழ் வரும் நிதியாண்டில் ரூபாய் 63 கோடி செலவில் வன மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும். இதன் கீழ், 450 தடுப்பணைகள் மற்றும் 150 கசிவு நீர்க்குட்டைகள் அமைக்கப்படும்.**

**120.** கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்த அரசு செயல்படுத்திவரும், தனியார் நிலங்களில் மரம் வளர்க்கும் திட்டம், தமிழக விவசாயிகளிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. **மாநிலத்தின் வனப் பரப்பை அதிகரிக்கும் நோக்கத்தோடு வரும் ஆண்டிலும் சுமார் ஒரு கோடி மரக்கன்றுகள் இத்திட்டத்தின் கீழ் நடப்படும். இதற்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## இந்து சமய அறநிலையத் துறை

**121.** இந்துக்களில் தகுதிபெற்ற அனைத்துச் சாதியினரும் கோயில்களில் அர்ச்சகர் ஆகலாம் என்ற சமத்துவக் கொள்கையை நிலைநாட்டி, தந்தை பெரியார் அவர்களின் கனவை இந்த அரசு நனவாக்கியுள்ளது. 6 அர்ச்சகர் பயிற்சி நிலையங்கள் தொடங்கப்பட்டு இவற்றில், அனைத்துச் சாதிகளையும் சேர்ந்த 207 மாணவர்கள் ஓராண்டு அர்ச்சகர் பயிற்சியை முடித்துள்ளனர். இவர்கள் அனைவரும் அர்ச்சகர்களாக திருக்கோயில்களில் பணியாற்ற இந்த அரசு ஆவன செய்யும்.

## விளையாட்டு மற்றும் இளைஞர் நலன்

**122.** கடந்த இரண்டு ஆண்டுகளில் அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் ரூபாய் 5 கோடி செலவில் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. **விளையாட்டுத் திறன்கொண்ட இளைஞர்கள் உரிய பயிற்சிகளைப் பெற ஏதுவாக, திருநெல்வேலியில் ரூபாய் 300 இலட்சம் மதிப்பீட்டில், புதிய செயற்கை இழை ஓடுதளம் ஒன்று அமைக்கப்படும். மேலும், கோவை மாவட்டத்தில் ரூபாய் 175 இலட்சம் மதிப்பீட்டில் சர்வதேச தரத்திலான நீச்சல் குளம் ஒன்று அமைக்கப்படும்.**

## அரசு அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியர் நலன்

**123.** இந்த அரசு பொறுப்பேற்றவுடன் பல்வேறு துறைகளில் காலியாக இருந்த பணியிடங்கள் அனைத்தையும் நிரப்பி வருவதோடு, கடந்த ஆட்சிக் காலத்தில் பறிக்கப்பட்ட உரிமைகளை அரசு அலுவலர்களுக்கு மீட்டெடுத்துத் தந்துள்ளது. அரசு அலுவலர்களுக்காக மட்டுமே நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த மருத்துவ உதவித் திட்டத்தின் பலன்களை உயர்த்தி, இப்பலன்களை, பொதுத்துறை நிறுவனங்கள், சட்டப்படியான வாரியங்கள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் பணிபுரிவோரும் பெற்றுப் பயனடைந்திடும் வகையில் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்தியுள்ளது. முன்னர் இருந்த மருத்துவ உதவித் திட்டத்தின் கீழ், ஆண்டொன்றுக்கு சராசரியாக 2,000 அலுவலர்கள் ரூபாய் 18 கோடி அளவிலான மருத்துவ உதவிகளைப் பெற்று வந்ததோடு ஒப்பிடும்போது, இந்த அரசு செயல்படுத்தியுள்ள புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், முதல் எட்டு மாதங்களிலேயே 19,311 அலுவலர்கள் ரூபாய் 70 கோடி அளவிற்கு மருத்துவ சிகிச்சை பெற்றுள்ளனர். இத்திட்டத்திற்கான காப்பீட்டுத் தொகையாக ரூபாய் 66 கோடி இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**124.** ஆறாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை மாநில அரசு அலுவலர்களுக்கும் நடைமுறைப்படுத்துவது குறித்து ஆய்வு செய்ய இந்த அரசால் அமைக்கப்பட்ட அதிகாரிகள் குழு, பல்வேறு சங்கங்களையும், அமைப்புகளையும் சந்தித்து அவர்களின் கோரிக்கைகளைப் பெற்று பரிசீலனை செய்து வருகிறது. இந்த நிலையில், முன் எப்போதும், எந்த மாநிலத்திலும் அளிக்கப்படாத அளவில் ரூபாய் 4,247 கோடியை இடைக்கால நிலுவைத் தொகையாக அரசு அலுவலர்களுக்கு இந்த அரசு வழங்கியுள்ளது. **அதிகாரிகள் குழுவின் அறிக்கையைப் பெற்று, ஆய்ந்து, திருத்திய ஊதிய விகிதங்களை இந்த அரசு விரைவில் நடைமுறைப்படுத்தும்.**

125. ஓய்வூதியதாரர்களின் மருத்துவ சிகிச்சைத் திட்டத்தின் கீழ், அவர்களிடமிருந்து திரட்டப்படும் நிதி போதுமானதாக இல்லாததால், அப்பற்றாக்குறையை ஈடுசெய்ய கடந்த மூன்று ஆண்டுகளில் ரூபாய் 24 கோடி இந்த அரசால் வழங்கப்பட்டுள்ளதோடு, ஈட்டுத்தொகைக்கான உச்சவரம்பும் ரூபாய் 50,000 லிருந்து ரூபாய் ஒரு இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. **ஓய்வூதியதாரர்களின் மனைவி அல்லது கணவர் நோய்வாய்ப்படும்போது அவர்களின் மருத்துவச் செலவிற்கும் இத்திட்டத்தின் கீழ் ஈட்டுத்தொகை வழங்கப்பட வேண்டும் என்ற நெடுநாளையக் கோரிக்கையை ஏற்று, இனி அவர்களின் மருத்துவச் செலவிற்கான ஈட்டுத்தொகையையும் இந்த அரசு வழங்கும்.**

## ஆண்டுத் திட்டம்

126. பதினோராவது ஐந்தாண்டுத் திட்டம் 2007–2008 ஆம் ஆண்டு முதல், ரூபாய் 85,344 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. முதல் ஆண்டான 2007–2008 ஆம் ஆண்டில் ரூபாய் 14,000 கோடி ஒதுக்கீட்டிலும், 2008–2009 ஆம் ஆண்டில் ரூபாய் 16,000 கோடி மதிப்பீட்டிலும் திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. **இந்தத் திட்ட ஒதுக்கீடு மேலும் உயர்த்தப்பட்டு, வரும் 2009–2010 ஆம் நிதி ஆண்டில், ரூபாய் 17,500 கோடி அளவில் திட்டப்பணிகளைச் செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது.**

## வரிகள்

127. கடந்த மூன்று ஆண்டுகளில் மின் கட்டணமும், போக்குவரத்துக் கட்டணமும் உயர்த்தப்படவில்லை. இதுமட்டுமன்றி, கடந்த மூன்று நிதிநிலை அறிக்கைகளில் பல்வேறு பொருட்களின்மீதான விற்பனை வரி மற்றும் மதிப்புக்கூட்டுவரி ஆகியவற்றிற்கு விலக்கு அளித்தும், வரியைக் குறைத்தும் மட்டுமே அறிவித்துள்ளது. இதுபோன்றே, இந்த நிதிநிலை அறிக்கையிலும் அனைவருக்கும் பலனளிக்கும் வகையில் வரி விலக்குகளையும், வரி குறைப்புகளையும் செய்திடக் கருதியுள்ளது. இந்த அரசு தொடர்ந்து கடைப்பிடித்துவரும்

முறைப்படி, 4.2.2009 அன்று அரசு சார்பில் நடத்தப்பட்ட வணிகர்கள் மற்றும் உற்பத்தியாளர்களின் பிரதிநிதிகளுடனான கலந்தாய்வுக் கூட்டத்தில் விடுக்கப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில், நுகர்வோர், வணிகர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் அனைவரின் நலனையும் கருத்தில் கொண்டு, மதிப்புக்கூட்டு வரி விதிப்பில் பின்வரும் சலுகைகள் அறிவிக்கப்படுகின்றன.

- சென்ற ஆண்டு அஞ்சறைப் பெட்டி மளிகைப் பொருட்களான கடுகு, வெந்தயம் மற்றும் சோம்பு ஆகியவற்றிற்கு குறிப்பிட்ட விற்றுமுதல் வரை வரி விலக்கு அளிக்கப்பட்டது. இவற்றில் விட்டுப்போன இரு மளிகைப் பொருட்களான மிளகு மற்றும் சீரகம் ஆகியவற்றிற்கும் அதே விற்றுமுதல் நிபந்தனையுடன் வரிவிலக்கு அளிக்கப்படும்.
- பருப்பு, பயிறு மற்றும் பட்டாணி ஆகிய பொருட்களின் விற்பனைக்கு ஏற்கனவே நிபந்தனையுடன் கூடிய வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. எனினும், இப்பொருட்களை மாவு பேன்ற பொருட்களின் உற்பத்திக்காக கொள்முதல் செய்யும்பொழுது, கொள்முதல் வரி விதிக்கப்படுகிறது. இதைத் தவிர்க்க, பருப்பு, பயிறு மற்றும் பட்டாணி ஆகிய பொருட்களுக்கு கொள்முதல் வரியிலிருந்து 1.1.2007 முதல் விலக்களிக்கப்படும்.
- கையினால் தயாரிக்கப்படும் இரும்புப் பெட்டி (trunk box)க்கு தற்பொழுது 12.5 விழுக்காடு வரி விதிக்கப்படுகிறது. இப்பொருளுக்கு முழு வரிவிலக்கு அளிக்கப்படும்.
- கையினால் தயாரிக்கப்படும் தகர டின்களுக்கு முழு வரிவிலக்கு அளிக்கப்படும்.
- வணிகச் சின்னமிடப்பட்ட நெய்யின் மீது தற்போது விதிக்கப்படும் 12.5 விழுக்காடு வரி 4 விழுக்காடு வரியாகக் குறைக்கப்படும்.

- வணிகச் சின்னமிடப்பட்ட ஊறுகாயின் மீது தற்போது விதிக்கப்படும் 12.5 விழுக்காடு வரி 4 விழுக்காடு வரியாகக் குறைக்கப்படும்.
- கையினால் தயாரிக்கப்படும் இரும்புப் பெட்டகத்தின்மீது (Iron safe) விதிக்கப்படும் 12.5 விழுக்காடு வரி 4 விழுக்காடு வரியாகக் குறைக்கப்படும்.
- உலர்ந்த திராட்சையின் மீது தற்போது விதிக்கப்படும் 12.5 விழுக்காடு வரி 4 விழுக்காடு வரியாகக் குறைக்கப்படும்.
- சலவைத் தண்ணீரின் (Bleach liquid)மீது தற்போது விதிக்கப்படும் 12.5 விழுக்காடு வரி 4 விழுக்காடு வரியாகக் குறைக்கப்படும்.
- இணைப்பான்களாகப் பயன்படுத்தப்படும் குண்டூசி, ஊக்கு, ஜெம் கிளிப்புகள், அடையாள அட்டை கிளிப்புகள், தேர்வு அட்டை கிளிப்புகள், இரப்பர் பேண்ட், ஸ்டேப்ளர் பின் ஆகிய பொருட்களின் மீது தற்போது விதிக்கப்படும் 12.5 விழுக்காடு வரி 4 விழுக்காடு வரியாகக் குறைக்கப்படும்.
- தகவல் தொழில்நுட்பப் பொருளான ஐ–பாட் (i-pod), MP3 மற்றும் MP4 பிளேயர்கள் மீது தற்போது விதிக்கப்படும் 12.5 விழுக்காடு வரி 4 விழுக்காடு வரியாகக் குறைக்கப்படும்.
- சேலம் சேகோசர்வ் (Sagoserve) மூலம் விற்கப்படும் ஜவ்வரிசி மற்றும் ஸ்டார்ச் மீதான வரி 2 விழுக்காட்டிலிருந்து 1 விழுக்காடாகக் குறைத்து விதிக்கப்படும்.
- செங்கல் உற்பத்தியாளர்கள் எளிதான முறையில் வரி செலுத்தும் வகையில், வணிகரின் விருப்பத்தின்பேரில் அவர்கள் அமைத்திருக்கும் செங்கல் சூளை அடுப்புகளின் எண்ணிக்கை அடிப்படையில் வரி விதிக்கப்படும்.

- 1.1.2007 முதல் 31.3.2007 முடிய உள்ள காலத்திற்கு ரூ.5 இலட்சம் மற்றும் ரூ.10 இலட்சம் தொகைக்குக் குறைவான விற்றுமுதல் தொகை கொண்ட உற்பத்தியாளர்கள் மற்றும் வணிகர்கள் மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் கீழான சலுகைகளை தங்களுக்கும் அளிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தனர். இக் கோரிக்கையினை ஏற்று இவர்களின் 1.4.2006 முதல் 31.12.2006 வரையிலான காலத்திற்கு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் உண்டான விற்பனைத் தொகையினையும் சேர்த்து கணக்கிட்டு, மதிப்பு கூட்டு வரிச் சட்டத்தின் கீழ் ஆண்டு மொத்த விற்பனைத் தொகையாகக் கருதி மதிப்புக் கூட்டு வரி விதிப்பு செய்யப்படும். இது மேற்குறிப்பிட்ட காலத்தில் மதிப்புக் கூட்டு வரி வசூல் செய்த வணிகர்களுக்கு மட்டும் பொருந்தும். இதனால் சுமார் 10 ஆயிரம் சிறு உற்பத்தியாளர்கள் மற்றும் வணிகர்கள் பயன் பெறுவார்கள்.
- மதிப்புக் கூட்டு வரி விதிப்பு முறையை மேலும் எளிமைப்படுத்தும் வகையில், தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் 2006 மற்றும் அதன் விதிகளில் தேவையான உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். இது தொடர்பான விவரங்கள் வணிகவரித்துறை மானியக் கோரிக்கையின் போது அறிவிக்கப்படும்.

தற்போது அறிவிக்கப்பட்ட வரிவிலக்கு மற்றும் வரிக்குறைப்பு சலுகைகள் 1.4.2009லிருந்து நடைமுறைப்படுத்தப்படும். இச்சலுகைகளால் அரசுக்கு ரூபாய் 100 கோடி வரி இழப்பு ஏற்படுமெனினும், பொதுமக்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் வணிகர்களின் நலன் கருதி இச்சலுகைகளை இந்த அரசு அறிவிக்கிறது.

128. திரைப்படத்துறைக்கு உதவும் வகையில் வெளிப்புறப் படப்பிடிப்புக்கான கட்டணத்தை இந்த அரசு குறைத்ததோடு, பொதுமக்கள் திரையரங்குகளுக்கு வந்து திரைப்படங்களைக்

காணச் செய்து இத்தொழிலுக்கு புத்துயிரூட்டும் நோக்கோடு, தமிழில் பெயர் சூட்டப்படும் தமிழ்த் திரைப்படங்களுக்கு கேளிக்கை வரியிலிருந்து முழுமையாக விலக்கும் அளித்துள்ளது. **திரைப்படத்துறைக்கு இவ்வளவு சலுகைகள் அளித்தும், இவற்றின் பயன்கள் பொதுமக்களுக்குச் சென்றடையாத நிலை தொடர்வதால், இச்சலுகையை மறு பரிசீலனை செய்ய இவ்வரசு குழு ஒன்றை அமைக்கும்.**

## ஒட்டுமொத்த நிதிநிலை

**129.** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **2009–2010** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தின், நிதிநிலை பற்றிய கணிப்புகளை தற்போது நான் அளிக்கின்றேன். **2009–2010** ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசின் மொத்த வருவாய் வரவுகள் ரூபாய் **58,270.93** கோடி எனவும், ஏற்படக்கூடிய வருவாய்ச் செலவினங்கள் ரூபாய் **59,295.28** கோடி எனவும் மதிப்பிடப்பட்டுள்ளன. மேலும், வரும் நிதியாண்டில், நிகரக் கடன்கள் மற்றும் முன்பணங்கள் உள்ளிட்ட அரசின் மூலதனச் செலவு ரூபாய் **10,799.30** கோடி எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

**130.** மேற்கூறிய சூழ்நிலையில் வரும் நிதியாண்டில் தமிழக அரசின் வருவாய்ப் பற்றாக்குறை ரூபாய் **1,024.34** கோடியாகவும், நிதிப்பற்றாக்குறை ரூபாய் **11,823.64** கோடியாகவும் இருக்கும். நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள மந்த நிலையால் அரசின் வருவாய் வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள சரிவு, ஆறாவது ஊதியக்குழு பரிந்துரைகளின்படி ஊதிய உயர்வு மற்றும் பல்வேறு நலத் திட்டங்களுக்கான உயர் ஒதுக்கீடுகள் ஆகியவற்றால் இந்த வருவாய்ப் பற்றாக்குறை நிலை ஏற்பட்டுள்ளது. இருப்பினும், நாட்டில் கடினமான பொருளாதார நிலை நிலவிவரும் இவ்வேளையில், இதனால் சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ளோர் பாதிக்கப்படாது பாதுகாக்கவும், மாநிலம் தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் பீடுநடை போடவும், அரசின் வளர்ச்சிச் செலவினங்களை உயர்த்துவதே ஒரே வழி என்பதை உணர்ந்து, பல்வேறு திட்டங்களுக்கும் போதிய நிதி ஒதுக்கீட்டை இந்த அரசு உறுதி

செய்துள்ளது. இத்தகைய சூழ்நிலையிலும்கூட, மொத்த நிதிப் பற்றாக்குறை 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலைப் பொறுப்புடைமைச் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளவாறே, நிதிப்பற்றாக்குறை மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் 3 சதவீதத்திற்கு உள்ளாகவே கட்டுப்படுத்தப்பட்டு உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ள வேண்டுகிறேன். பொதுக் கணக்கின் நிகரத்தோடு எடுத்துக்கொண்டால் ஒட்டுமொத்த பற்றாக்குறை ரூபாய் 6.36 கோடியாக இருக்கும். செலவினங்களில் சிக்கனத்தைக் கடைபிடித்தும், வரி வசூலை மேம்படுத்தியும் இந்தப் பற்றாக்குறை ஈடுகட்டப்படும்.

131. வரவு–செலவுத் திட்ட உரையின் இணைப்பில் அளிக்கப்பட்டுள்ள இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டத்தில் (Medium Term Fiscal Plan – MTFP), மாநிலத்தின் எதிர்கால நிதிநிலை செயல்திட்டம் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது. இதனை வரவு–செலவுத் திட்டத்தின் ஒரு பகுதியாகப் படிக்கப்பட்டதாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். இந்தத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிதிநிலை இலக்குகளை இந்த அரசு செம்மையாகப் பின்பற்றும்.

132. பேரறிஞர் அண்ணா அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, உறுதிபெற்று, நீடித்து நிலைத்திருக்கும் திராவிட முன்னேற்றக் கழகம்; செந்தமிழ்நாட்டு மக்களின் பேராதரவுடன் ஆட்சிப் பொறுப்பேற்று; சமுதாயத்தின் அனைத்துத் தரப்பினரும், குறிப்பாகவும் சிறப்பாகவும் சாதாரண சாமான்ய மக்களும் நலமும் வளமும் பெற்று மேம்பாடடையத் தொடர்ந்து திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த தமிழினத்தின் மொழி, கலை, பண்பாடு, கலாச்சாரம் ஆகியவற்றை கண்ணெனப் போற்றிக் காப்பதிலும், காத்து வளர்ப்பதிலும் முனைப்போடு பணியாற்றி வருகின்றது என்பதற்கு அடையாளமாக – ஐந்தாவது முறையாக ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பிறகு, இந்த மூன்றாண்டு காலத்தில் எண்ண எண்ண இனித்திடும் வகையில் புரிந்துள்ள சாதனைகள் ஏராளம்; ஏராளம்!

133. பின்வரும் அந்தச் சாதனைப் பட்டியலை ஒரு கணம் நினைவு கூர்ந்தால், நமது முதலமைச்சர் கலைஞர் அவர்களின் எண்ணங்களும், செயல்பாடுகளும் இந்த நாட்டிலே வாழும் அடித்தட்டு மக்களையே சுற்றி சுற்றி சுழன்று வருவதை தெரிந்து கொள்ள முடியும். சான்றுக்கு சாதனைப் பட்டியலில் சில :–

- ❖ ஒரு கோடியே 86 லட்சம் குடும்பங்களுக்கு மாதம் 20 கிலோ அரிசி; ஒரு கிலோ ஒரு ரூபாய் வீதம்.
- ❖ தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை தமிழ்ப் புத்தாண்டாக அறிவிக்கச் செய்து, தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் இத்திருநாளை இரட்டிப்பு மகிழ்ச்சியுடன் கொண்டாடிட, ஒரு கோடியே 84 இலட்சம் குடும்பங்களுக்கு 80 கோடி ரூபாய் செலவில் பொங்கல் பரிசாக அரிசி, பருப்பு, வெல்லம் ஆகியன.
- ❖ 22 லட்சத்து 40 ஆயிரத்து 739 விவசாயக் குடும்பங்களுக்கு 7000 கோடி ரூபாய் கூட்டுறவு கடன் ரத்து.
- ❖ உழவரும் நுகர்வோரும் பெரும்பயன் அடைந்திட மாநிலமெங்கும் 117 உழவர் சந்தைகள் மீண்டும் புதுப்பொலிவுடன் திறப்பு.
- ❖ 3 லட்சத்து 74 ஆயிரத்து 357 அமைப்புசாரா தொழிலாளர் குடும்பங்களுக்கு 104 கோடியே 97 லட்சத்து 44 ஆயிரம் ரூபாய் உதவித் தொகை.
- ❖ 1374 கோடியே 54 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் செலவில் இதுவரை 56 லட்சத்து 26 ஆயிரத்து 557 ஏழைக் குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள்.
- ❖ 220 கோடி ரூபாய் செலவில் 11 லட்சம் குடும்பங்களுக்கு எரிவாயு இணைப்புடன் இலவச எரிவாயு அடுப்புகள்
- ❖ 2 லட்சத்து 10 ஆயிரத்து 289 ஏக்கர் நிலம் 1 லட்சத்து 75 ஆயிரத்து 159 நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு இலவசம்.
- ❖ 6 இலட்சத்து 54 ஆயிரத்து 308 ஏழைக் குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள்.
- ❖ 73 இலட்சம் குழந்தைகள், மாணவர்களுக்கு வாரம் 3 முறை முட்டைகள், வாழைப்பழங்கள்.

- ❖ தமிழ் வழியில் பயிலும் 50 லட்சத்திற்கு மேற்பட்ட மாணவ மாணவியர்க்கு அரசுப் பள்ளிகளிலும், அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் சிறப்புக் கட்டணங்களும் 10, 12ஆம் வகுப்புகளின் அரசுத் தேர்வுக் கட்டணங்களும் ரத்து.
- ❖ 24 லட்சத்து 82 ஆயிரம் பள்ளி மாணவர்களுக்கும், 2லட்சத்து 99 ஆயிரம் கல்லூரி மாணவர்களுக்கும் இலவச மற்றும் சலுகைக் கட்டணத்தில் பஸ் பாஸ்.
- ❖ 2 லட்சத்து 14 ஆயிரத்து 189 ஏழைப் பெண்களின் திருமணங்களுக்கு 335 கோடியே 89 லட்சம் ரூபாய் திருமண நிதி உதவி.
- ❖ 10 லட்சத்து 78 ஆயிரத்து 612 ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்கு 487 கோடியே 56 இலட்ச ரூபாய் நிதி உதவி.
- ❖ 1 லட்சத்து 42 ஆயிரத்து 369 கைத்தறி நெசவாளர்களுக்கும், 1 லட்சத்து 5 ஆயிரத்து 182 விசைத்தறி நெசவாளர்களுக்கும், சுயநிதித் திட்டத்தின் கீழ் மின் இணைப்பு பெற்ற 2 லட்சத்து 39 ஆயிரத்து 511 விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம்.
- ❖ 3 லட்சத்து 53 ஆயிரத்து 488 படித்து வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு 176 கோடியே 15 லட்சத்து 30 ஆயிரத்து 604 ரூபாய் உதவித்தொகை.
- ❖ 3 லட்சம் இளைஞர்களுக்கு அரசு மற்றும் அரசு நிறுவனங்களில் வேலை வாய்ப்புகள்.
- ❖ 15 லட்சத்து 29 ஆயிரத்து 582 முதியோர் மற்றும் ஆதரவற்ற விதவைகளுக்கு மாதம் 400 ரூபாய் வீதம் உதவித் தொகை.
- ❖ 2 இலட்சத்து 12 ஆயிரத்து 981 சத்துணவுப் பணியாளர்களுக்கு காலமுறை ஊதியம், ஓய்வூதியம்.

134. ‘‘கோயில் கூடாது என்பதல்ல, கோயில் கொடியவர்களின் கூடாரமாக ஆகி விடக் கூடாது’’ என்ற பொன்மொழியை தமிழகத்திற்கு அளித்த கலைஞரின் ஆட்சியில் இந்த மூன்றாண்டு காலத்தில் 3,072 திருக்கோயில்கள் 65 கோடி ரூபாய்ச் செலவில் புதுப்பிக்கப்பட்டு, குடமுழுக்குகள் நடத்தப்பட்டுள்ளன. பழைய தேர்களைப் புதுப்பித்தல், பொன்னாலான புதிய தேர்களைச் செய்தல், திருக்கோயில்

பக்தர்களுக்குத் தேவையான வசதிகளை செய்தல் போன்ற பணிகள் 2,790 திருக்கோயில்களில் 257 கோடி ரூபாய் செலவில் நடைபெற்று வருகின்றன. வரலாற்றுச் சிறப்பு மிக்க 46 புராதனத் திருக்கோயில்களை பத்து கோடி ரூபாய்ச் செலவில் சீரமைத்து, புதுப்பித்திடும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. திக்கெட்டும் புகழ்பெற்ற தில்லை நடராஜர் திருக்கோயில் அரசுப் பொறுப்புக்கு வருகின்ற அற்புத நீதியும் கிடைத்துள்ளது.

135. ‘‘திங்களொடும், செழும்பரிதி தன்னோடும், விண்ணோடும், உடுக்களோடும் – மங்குல் கடல் இவற்றோடும் பிறந்த’’ பழம்பெரும் தமிழ்ப் பண்பாட்டின் பன்முகக் கூறுகளை நினைவுபடுத்திடும் வகையிலும்; ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே உலகத்தின் நீள அகலத்தை எண்ணத்தால் அளந்து – மானுடத்தின் உச்சத்தை எட்டிப் பிடித்து, ‘யாதும் ஊரே; யாவரும் கேளிர்!’ என உணர்த்திய சங்கப் புலவன் கணியன் பூங்குன்றனார் முதல் – கொடி காத்த குமரன் வரை – சரித்திரமாகிவிட்ட சான்றோர், அரசியல் ஆன்றோர், தியாகச் செம்மல்கள், இலக்கிய ஏந்தல்கள் அனைவரையும், இன்றைய தலைமுறையினரும் இனிவரும் தலைமுறையினரும் நினைந்து நினைந்து போற்றிடும் வகையிலும் – நிலைத்திருக்கும் நினைவுச் சின்னங்கள் இன்றைய அரசால் நிறுவப்பட்டுள்ளன. இந்த ஆட்சியில் – தியாகி ஆர்யா என்கிற பாஷ்யம், தியாகி சங்கரலிங்கனார், தியாகி செண்பகராமன், வீரன் அழகுமுத்துக்கோன், எஸ்.எஸ்.இராமசாமி படையாச்சியார், தியாகி கக்கன், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் போன்றோரின் திருவுருவச் சிலைகளையும் – பூலித்தேவன், கட்டபொம்மன், சுந்தரலிங்கம், விசுவநாத தாஸ், ஜீவானந்தம், தில்லையாடி வள்ளியம்மை, மகாகவி பாரதியார், அண்ணல் அம்பேத்கர், மூதறிஞர் ராஜாஜி, நாமக்கல் கவிஞர் ராமலிங்கனார், உடுமலையார், பட்டுக்கோட்டையார், கவிஞர் கண்ணதாசன், போன்றோரின் நினைவுபோற்றும் மணிமண்டபங்களையும், நினைவுச் சின்னங்களையும் – மருதுபாண்டியர், பசும்பொன் தேவர் திருமகனார், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர்

காமராஜர், பெரியவர் பக்தவத்சலம், கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். (முதல் நினைவிடம்) போன்ற தியாக சீலர்களுக்கு நினைவிடங்களையும் – ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சர்.பிட்டி தியாகராயர் கலையரங்கம், கலைவாணர் அரங்கம் போன்றவற்றையும் அமைத்துள்ளதோடு; பூம்புகாரில் சிலப்பதிகார எழுநிலை மாடம், சென்னையில் வள்ளுவர் கோட்டம், சூழும் தென்கடல் ஆடும் குமரியில் வான்புகழ் வள்ளுவருக்கு வானுயரச் சிலை ஆகியவற்றையும் எழுப்பி அவர்களைத் தமிழகம் என்றென்றும் மறக்காவண்ணம் நிலைநிறுத்தியுள்ளோம்.

**136.** சென்னையில் கன்னடக் கவிஞர் சர்வஜ்னாவின் சிலையை நிறுவ வேண்டுமென்ற கோரிக்கையை ஏற்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஒப்புதல் அளித்ததையொட்டி, இந்தப் பெருந்தன்மையை உணர்ந்து பெங்களூருவில் திருவள்ளுவர் சிலை அமைப்பதற்கு ஒத்துழைப்பு தர கர்நாடக முதலமைச்சர் அவர்கள் இசைவளித்துள்ளார். இதையடுத்து, தமிழகத்தில் வாழும் கன்னடர்களும், கர்நாடகத்தில் வாழும் தமிழர்களும் நீண்டகாலமாக கண்டுவரும் கனவு நிறைவேறிடும் வண்ணம், பெங்களூருவில் அய்யன் திருவள்ளுவர் சிலையும், சென்னையில் கவிஞர் சர்வஜ்னாவின் சிலையும் விரைவில் நிறுவப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். மாநிலத்திற்கு மாநிலம் இதுபோன்று நல்லுறவு செழித்தோங்கி வளர வேண்டும் என்பதுதான் இந்த அரசின் விருப்பமும் நோக்கமுமாகும்.

**137.** வெள்ளம்போல் தமிழர் கூட்டம்
வீரங்கொள் கூட்டம்; அன்னார்
உள்ளத்தால் ஒருவ ரேமற்
றுடலினால் பலராய்க் காண்பார்
கள்ளத்தால் நெருங்கொ ணாதே;
எனவையம் கலங்கக் கண்டு
துள்ளும்நாள் எந்நாள்? உள்ளம்
சொக்கும்நாள் எந்த நாளோ ?

எனப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஏக்கங்கொண்டு கண்ட கனவை நனவாக்க நாளும் உழைத்து வரும் இந்த அரசு; நாடும் வீடும் நலம் பெறவும்; இனமும் மொழியும் ஏற்றம் பெறவும்; மதச்சார்பின்மை போற்றி, மதநல்லிணக்கம் நிலை பெறவும்; அண்ணா அவர்களின் அரிய எண்ணமும், நமது கலைஞர் அவர்களின் சிறப்பான செயல்பாடுகளும் நிறைவேறவும், தமிழக மக்கள் தொடர்ந்து ஒத்துழைப்பார்கள் என்ற நல்ல நம்பிக்கையோடு கழக அரசு, மத்திய ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் துணையுடன் அளப்பரிய பணிகளை ஆற்றி வருகிறது.

138. இந்த நிதி நிலை அறிக்கையைத் தயாரிப்பதற்கு என்னுடன் ஓய்வின்றி ஒத்துழைத்த நிதித்துறை முதன்மைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., அவர்களுக்கும், அரசின் நிதித் துறை உள்ளிட்ட அனைத்துத் துறை அதிகாரிகளுக்கும் இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு 2009–2010ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்ட அறிக்கையை இப்பேரவை முன் வைக்கின்றேன்.

**வணக்கம்**

**க. அன்பழகன்**
நிதி அமைச்சர்

சென்னை
2009 ஆம் ஆண்டு
பிப்ரவரித் திங்கள் 17 ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2040
மாசித் திங்கள் 5 ஆம் நாள்.

## இணைப்பு

### இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம்

தமிழ்நாடு அரசு 2003ஆம் ஆண்டு நிதிநிலைப் பொறுப்புடைமை சட்டத்தை இயற்றியுள்ளது. இச்சட்டம் பன்னிரண்டாவது நிதிக்குழுவினால் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளுக்கேற்ப பின்னர் திருத்தப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்தின் 3(1) பிரிவின்படி, மாநில அரசு வரவு செலவுத் திட்ட அறிக்கையுடன் இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் குறித்த அறிக்கை ஒன்றை சட்ட பேரவையில் வைக்க வேண்டும். இச்சட்டத்தின் 3(2) பிரிவின்படி, நிதி நிலைக் குறியீடுகளான, வருவாய் பற்றாக்குறை, நிதிநிலை பற்றாக்குறை ஆகியவை குறித்த தொடர் ஆண்டுகளுக்கான இலக்குகளைக் குறிப்பிட்டு, இக்கணிப்புகளுக்கான அனுமானங்களை விளக்கி இந்த இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் வகுக்கப்பட வேண்டும். இச்சட்டத்தின்படி, நடப்பு நிதிநிலைப் போக்குகளையும் அரசு மேற்கொண்டுள்ள கொள்கை முடிவுகளையும் கருத்தில் கொண்டு, 2009-2012 ஆம் ஆண்டுகளுக்குரிய நிதிநிலை பற்றிய கணிப்புகளை உள்ளடக்கிய இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் தயாரிக்கப்பட்டு இந்தப் பேரவை முன் வைக்கப்படுகிறது. இத்துடன் இணைப்பாகக் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை, 2009-2012 ஆண்டுக் காலத்திற்கான இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டத்தைக் காட்டுகிறது.

**நோக்கங்கள்**

2. 2003 ஆம் ஆண்டு நிதிநிலைப் பொறுப்புடைமைச் சட்டத்தின்படி, 2008–2009 ஆம் ஆண்டில் வருவாய்ப் பற்றாக்குறையை நீக்கி, மொத்த நிதிப் பற்றாக்குறையை மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பின் 3 சதவீதத்திற்குள்ளாக கட்டுப்படுத்துவதோடு, இந்நிலையை வரும் ஆண்டுகளிலும் தொடர வேண்டும்.

3. **2007–2012**ஆம் ஆண்டு காலத்திலான பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்டம், **9** சதவீத சராசரி ஆண்டுப் பொருளாதார வளர்ச்சியை இலக்காகக் கொண்டுள்ளது. இக்காலத்தில் ரூபாய் **85,344** கோடி ஒதுக்கீட்டில் பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை தமிழகம் செயல்படுத்தும். இத்திட்டப் பணிகளுக்கான நிதித் தேவை இந்த இடைப்பட்ட கால நிதிநிலவரத் திட்டத்தில் கருதப்பட வேண்டும்.

**குறிப்பிடத்தக்க அம்சங்கள்**

**4.** ஆறாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துதல், அரசின் நலத் திட்டங்களுக்கான ஒதுக்கீடுகளில் ஏற்பட்டுள்ள உயர்வு, புதிய திட்டங்களுக்கான நிதித் தேவை ஆகியவற்றாலும், பொருளாதார மந்த நிலையால் வருவாய் வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள சரிவாலும், வருவாய் உபரி நிலையில் தொடர்ந்து இருக்க இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனினும் நிதிப்பற்றாக்குறை மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் **3** சதவீதத்திற்குள்ளாகவே கட்டுப்படுத்தப்பட்டுள்ளது..

**5.** பொருளாதார மந்த நிலையால் ஏற்பட்டுள்ள மற்றும் எதிர்பாக்கப்படும் விளைவுகளை இந்த இடைப்பட்ட கால நிதிநிலவரத் திட்டம் கருத்தில் கொண்டுள்ளது. தனியார்துறை முதலீடுகள் குறைந்துவரும் இவ்வேளையில் ஏழை எளியோரைப் பாதுகாக்கவும், பொருளாதாரத்தில் தேவையை அதிகரித்து வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கவும் அரசின் சமூகநலம் மற்றும் கட்டமைப்பு துறைகளில் செலவினங்களை உயர்த்துவது இன்றியமையாதது என்பதையும் கருதியுள்ளது.

**6.** **2009–2010** ஆம் ஆண்டில் ரூபாய் **1024.14** கோடி அளவிற்கு வருவாய் பற்றாக்குறை ஏற்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இது இந்த நிதியாண்டில் வருவாய் வரவுகளில் **1.7** சதவீதம் மட்டுமேயாகும். இந்த குறைந்த அளவு வருவாய்ப் பற்றாக்குறையும் தற்காலிகமானதே. **2010–2011** ஆம் ஆண்டில் மீண்டும் வருவாய் உபரிநிலை எட்டப்பட்டு,

2011–2012 ஆம் ஆண்டிலும் இந்நிலையே தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு தற்போது பெரும் நிதிச்சுமை ஏற்பட்டுள்ளபோதிலும், சட்டத்தில் வரையறுக்கப்பட்டவாறே நிதிப்பற்றாக்குறை மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் 3 சதவீதத்திற்குள்ளாகவே அதாவது 2.99 சதவீத அளவிலேயே இருக்கும். 2010–2011 மற்றும் 2011–2012 ஆம் ஆண்டுகளில் இது 2.73 சதவீதமாக மேலும் குறையும் என இந்த இடைப்பட்ட கால நிதிநிலவரத் திட்டத்தில் மதிப்பிடப்பட்டுள்ளது.

7. மாநிலம் தனது எதிர்பாராக் கடன் பொறுப்புகளை முறையாக நிருவகித்து வருகிறது. ஒவ்வொரு ஆண்டிலும் நிலுவையிலுள்ள அரசு உத்தரவாதங்கள் முந்தைய ஆண்டின் மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் 100 சதவீத அளவிற்குக் குறைவாகவோ அல்லது மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 10 சதவீத அளவிற்குக் குறைவாகவோ, இவற்றில் எது குறைவானதோ அந்த அளவிற்கு அமையப்பெற வேண்டும். 31.3.2008 அன்று உள்ளபடி நிலுவையிலுள்ள அரசு உத்தரவாதங்களின் அளவு மொத்த வருவாய் வரவுகளில் 11.8 சதவீதமாகவும் மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 1.9 சதவீதமாகவும் உள்ளது. ஒவ்வொரு ஆண்டிலும் மீளப்பெறும் சாத்தியகூறுகளின் அடிப்படையில் (Risk weighted) கணக்கிடப்பட்ட நிலுவையிலுள்ள அரசு உத்திரவாதங்கள் முந்தைய ஆண்டின் மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் 75 சதவீதத்திற்கு மிகாமலோ அல்லது மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 7.5 சதவீதத்திலோ இதில் எது குறைவானதோ அந்த அளவிற்குள் இருக்க வேண்டும். 31.3.2008 அன்று உள்ளபடி மீளப்பெறும் சாத்தியக் கூறுகளின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட அரசு உத்திரவாதங்களின் (Risk weighted guarantees) அளவு, மொத்த வருவாய் வரவுகளில் 3.7 சதவீதமாகவும் மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 0.6 சதவீதமாவும் உள்ளது. பயனளிக்கக்கூடிய

திட்டங்களுக்கு மட்டும் உத்தரவாதங்கள் அளிக்கப்படுவதை உறுதிசெய்யும் வகையில் அரசு உத்தரவாதங்கள் கட்டுப்படுத்தப்படும்.

8. மூலதனச் செலவுகளுக்கான ஒதுக்கீடுகள் அதிகப்படுத்தப்பட்டுள்ள அதே வேளையில், பன்னிரண்டாம் நிதிக்குழு நிர்ணயித்துள்ள குறியீடுகளுக்கேற்ப அரசுச் சொத்துக்களின் பராமரிப்புச் செலவுகளுக்கும் போதுமான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## எதிர்காலக் கணிப்புகள்

## வருவாய்க் கணக்கு வரவுகள்

### மத்திய வரிகளில் பங்கு

9. மத்திய வரிகளில் மாநிலத்தின் பங்கு 2009-2010 ஆம் ஆண்டிற்கான மைய அரசின் வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ரூபாய் **9,096.21** கோடி என கணக்கில் மதிப்பிடப்பட்டுள்ளது. பொருளாதாரச் சூழ்நிலை காரணமாகவும் மற்றும் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்க அளிக்கப்பட்ட சலுகைகளாலும் மத்திய அரசின் மறைமுக வரி வசூலில் ஏற்பட்டுள்ள சரிவால் மாநிலத்தின் பங்குத் தொகையும் குறையும். இத்தொகைகள் மத்திய அரசின் நிதிநிலை அறிக்கை மதிப்பீடுகளின்படி கணக்கிடப்பட்டுள்ளன. **2010–2011** மற்றும் **2011–2012** ஆம் ஆண்டுகளுக்கு **12.5** சதவீத வளர்ச்சி கணக்கில் கொள்ளப்பட்டுள்ளது.

### மாநில அரசின் சொந்த வரி வருவாய்

10. மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் மாநிலத்தின் சொந்த வரி வருவாயின் விகிதம் **9.8** சதவீதமாக உள்ளது. இது நமது நாட்டில் உயர் அளவுகளில் ஒன்றாகும். **2009–2010** ஆம் ஆண்டில் மாநிலத்தின் சொந்த வரி வருவாய் ரூபாய் **38,578** கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. பின்வரும் ஆண்டுகளில் மாநில சொந்த

வரிவருவாயின் வளர்ச்சி வீதம் 12.5 சதவீதம் என்ற அளவில் இருக்குமெனக் கணிக்கப்பட்டுள்ளது. மாநிலத்தின் சொந்த வரிவருவாயின் முக்கியக் கூறுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

11. 2009-2010 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் வணிக வரிகளின் வசூல் ரூபாய் 24514.33 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2008–2009 ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீடுகளை விட 10.9 சதவீத வளர்ச்சியை மட்டுமே கணக்கில் கொண்டுள்ளது. அடுத்த ஆண்டுகளில் 12.5 சதவீத வளர்ச்சி கணக்கில் கொள்ளப்பட்டுள்ளது.

12. 2008-2009 ஆம் ஆண்டில் ஆயத்தீர்வை வரவுகள் ரூபாய் 6565.55 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2008-2009 ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடுகளைவிட 15 சதவீதம் கூடுதலாகும். பின்வரும் ஆண்டுகளுக்கும் 13 சதவீத அளவில் வளர்ச்சி கருதப்பட்டுள்ளது.

13. சொத்துக்கள் விற்றல் மற்றும் வாங்குதலில் ஏற்பட்டுள்ள சரிவால் முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவுக் கட்டணங்களின் வசூல் பாதிக்கப்பட்டுள்ளது. 2008–2009 ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீடுகள் வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளை விட ரூபாய் 459.08 கோடி குறைவாகவே இருக்கும். 2009–2010 ஆம் அண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டின் படி இது ரூபாய் 5,093.99 கோடியாக, அதாவது 2008–2009 வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளை விட வெறும் ரூபாய் 205 கோடி அளவிற்கே உயரும். அடுத்து வரும் ஆண்டுகளில் 12 சதவீத வளர்ச்சி கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

14. வரும் ஆண்டில், மோட்டார் வாகன வரிகள் ரூபாய் 1,994.4 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. பின்வரும் ஆண்டுகளுக்கு 12 சதவீத வளர்ச்சி கணக்கில் கொள்ளப்பட்டுள்ளது.

**வரி அல்லாத வருவாய்**

15. இவ்வினம் 2009-2010 ஆம் ஆண்டில் ரூபாய் 3,404.27 கோடியாகும். வருவாய் வரவுகளில் வரி அல்லாத வருவாயின் பங்கு 5.8 சதவீதமேயாகும். இந்த வருவாய் இனங்களை நிருவகிக்கும் நிறுவனங்கள் (Agencies) பயன்பாட்டுக் கட்டணங்களை நற்பணிகளை வழங்குவதற்கான செலவினங்களுக்காகப் பயன்படுத்திக் கொள்வதால், இந்த வருவாய் உயர்வதற்கு அதிக வாய்ப்புகள் இல்லை. மேலும், கல்வித் துறையில் மாணவர்களின் நலன் கருதி, கல்விக் கட்டணம், தேர்வுக் கட்டணம் ஆகியவற்றை இந்த அரசு இரத்து செய்துள்ளது. பொதுத்துறை நிறுவனங்களுக்கும் சட்டப்படியான வாரியங்களுக்கும் அரசு குறைந்த அளவிலேயே கடன்களை வழங்கி வருவதால் வரும் ஆண்டுகளில் வட்டி வரவுகளிலும் அதிக அளவு வளர்ச்சி இருக்காது என்பதை கருத்தில் கொண்டு, வரும் ஆண்டுகளில் வரி அல்லாத வருவாய் 5 சதவித அளவிற்கே வளரும் என கணக்கிடப்பட்டுள்ளது.

16. **மத்திய அரசிடமிருந்து பெறும் உதவி மானியங்கள்**:

உள்ளாட்சி அமைப்புகள், மாநிலத்தின் குறிப்பிட்ட பிரச்சினைகள், இயற்கைச் சீற்ற நிவாரண நிதி, பராமரிப்புச் செலவுகள் போன்ற இனங்களுக்கு பன்னிரண்டாவது நிதிக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் கிடைக்கக் கூடிய உதவித்தொகைகள் மற்றும் மதிப்புக்கூட்டு வரியால் ஏற்படும் இழப்பிற்கான இழப்பீடு ஆகியவற்றுக்காகவும் மத்திய அரசு அளிக்கும் மானியங்களின் அடிப்படையில் இந்த இனம் கணக்கிடப்பட்டுள்ளது. 1.4.2005க்கு முன்னர் ஏற்பளிக்கப்பட்ட வெளிநாட்டு உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கான மானியங்களும், உதவி மானியங்களின் கீழான எதிர்காலக் கணிப்புகளில் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. மொத்தம், 2009–2010 வரவு செலவு

திட்டத்தில் மத்திய அரசின் மானியங்கள் ரூபாய் 7,192.66 கோடியாக கணிக்கப்பட்டுள்ளது.

**வருவாய்க் கணக்கில் செலவுகள்**

17. 2008-2009 ஆம் ஆண்டிற்கான வருவாய்க் கணக்கு செலவுகள் ரூபாய் 59,295.28 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2007-2008 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளைவிட 7 சதவீத வளர்ச்சியைக் காட்டுகிறது. அரசின் பல்வேறு துறைகளில் உள்ள பணியிடங்களை நிரப்புதல் மற்றும் அரசு அறிமுகப்படுத்தியுள்ள பல்வேறு புதிய நலத் திட்டங்கள் ஆகியவற்றிற்கான கூடுதல் செலவுகள் மற்றும் வருமாண்டில் ஆறாவது ஊதியக்குழுவின் பரிந்துரைகளால் சம்பளம் மற்றும் ஓய்வூதியத்தில் ஏற்படக்கூடிய உயர்வு ஆகியவையே இதற்குக் காரணமாகும்.

18. மாநில அரசின் சொந்த வரிவருவாயில் சம்பளங்கள் மற்றும் ஓய்வூதியம் குறித்த செலவுகள் 79 சதவீதமாகவும், மாநிலத்தின் மொத்த வருவாயில் 52 சதவீதமாகவும் இருக்கும்.

19. கடன் பளுவை சமாளிக்கக் கூடிய அளவிற்குள்ளேயே வைத்திருக்கும் வகையில், கடன் பொறுப்புகளை அரசு கவனமாகக் கண்காணிக்கும். பன்னிரண்டாவது நிதிக்குழு பரிந்துரைத்துள்ளவாறு வருவாய் வரவுகளில் வட்டிச் செலவுகளின் பங்கை 15 சதவீத அளவிற்குள் கட்டுப்படுத்துவதற்கு இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டத்தில் கருதப்பட்டுள்ளது.

**பலன்கள்**

20. 2008–2009 ஆம் நிதியாண்டில் நிதிநிலைப் பொறுப்புடைமைச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள அனைத்து இலக்குகளையும் 2007–2008 ஆம் ஆண்டில் இந்த அரசு எய்தியுள்ளது. 2008–2009 ஆம் ஆண்டிலும் இந்த இலக்குகள் அனைத்தும் எய்தப்படும் என

எதிர்பார்க்கப்படுகிறது. **2009–2010** ஆம் ஆண்டில் குறைந்த அளவு வருவாய்ப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளபோதிலும், மொத்த நிதிப்பற்றாக்குறை இலக்கும் ஏனைய அனைத்து இலக்குகளும் எய்தப்படும் எனவும் அடுத்து வரும் ஆண்டுகளில் அனைத்து நிதிநிலை இலக்குகளும் எய்தப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. தேவைப்படின், நிதிநிலைப் பொறுப்புடைமைச் சட்டம் திருத்தப்படும்.

**21** மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் **3** சதவீதத்திற்குள் கட்டுப்படுத்தும் அதே நேரத்தில், சாதனை அளவாக ரூபாய் **10,071,89** கோடி அளவிலான மூலதனச் செலவிற்கும் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

**22.** சமூகப் பாதுகாப்பு வளையத்தின் கீழ் அளிக்கப்படும் நல உதவிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதற்காக **2009-2010** ஆம் ஆண்டில் ரூபாய் **15519.63** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**23.** பன்னிரண்டாவது நிதிக்குழுவின் பரிந்துரைகளின்படியே பொது சொத்துக்களின் பராமரிப்பிற்கான ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. கல்வி, சத்துணவு, சமூகப் பாதுகாப்பு நலனும் மற்றும் பொது சுகாதாரம் ஆகியவற்றிற்கான ஒதுக்கீடுகள் குறிப்பிடத்தக்க அளவில் உயர்த்தப்பட்டுள்ளன. வருமாண்டுகளிலும் இதே அளவு உயர் ஒதுக்கீடுகள் உறுதி செய்யப்பட்டுள்ளன.

**24.** தற்போது அளிக்கப்பட்டுள்ள இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, அனைத்து நிதிநிலை இலக்குகளையும் நம் மாநிலம் முழுமையாக எய்த உள்ளது.

* * * *

அட்டவணை - நடுத்தர கால நிதித் திட்டம்

*தற்போதைய விலையில் ரூபாய் கோடியில்*

| பிப்ரவரி 2009 | 2007-2008 கணிப்புகள் | 2007-2008 கணக்குகள் | 2008-2009 கணிப்புகள் | 2008-2009 திருத்த மதிப்பீடு | 2009-2010 கணிப்புகள் | 2009-2010 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | 2010-2011 கணிப்புகள் | 2011-2012 கணிப்புகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருவாய் | **42906.60** | **47147.20** | **49288.85** | **55102.93** | **57316.66** | **57951.60** | **63419.01** | **70437.95** |
| மாநிலத்தின் சொந்த வருவாய் | **32925.76** | **32550.16** | **37494.75** | **39858.86** | **41377.15** | **41662.72** | **46639.21** | **51141.18** |
| வரி | 30387.04 | 29619.10 | 34706.77 | 34521.50 | 38129.51 | 38578.00 | 43400.25 | 47740.27 |
| வரி அல்லாதவை | 2538.72 | 2931.06 | 2787.98 | 5337.37 | 3247.64 | 3084.72 | 3238.96 | 3400.91 |
| மத்திய அரசிடமிருந்து பெறப்படுபவை | **9980.84** | **14597.04** | **11794.10** | **15244.06** | **15939.51** | **16288.87** | **16779.80** | **19296.77** |
| பங்கிடப்பட்ட வரிகள் | 6808.85 | 8065.27 | 8475.31 | 8509.28 | 10921.14 | 9096.21 | 10233.24 | 11768.22 |
| உதவி மானியம் | 3171.99 | 6531.77 | 3318.79 | 6734.78 | 5018.37 | 7192.66 | 6546.56 | 7528.55 |
| வட்டியல்லாத செலவு | **44146.77** | **44760.03** | **51502.11** | **58312.48** | **62047.64** | **63440.56** | **69056.76** | **77480.21** |
| சம்பளங்கள்(கல்விக்கான அரசின் உதவி உட்பட) | 13762.93 | 12157.99 | 17655.15 | 17556.27 | 19741.26 | 20858.14 | 21623.95 | 24292.07 |
| ஓய்வூதியங்களும் ஓய்வுகாலப் பலன்களும் | 5947.56 | 6018.75 | 7114.76 | 7992.19 | 9137.34 | 9788.74 | 10107.62 | 11348.81 |
| ஊதியம் அல்லாத செயல்பாடுகளும் பராமரிப்புகளும் | 4621.37 | 4514.62 | 4717.10 | 4548.68 | 5005.60 | 4176.67 | 4510.80 | 4916.77 |
| ஏனைய வருவாய்ச் செலவினங்கள் | 9.32 | 6.13 | 9.31 | 11.35 | 8.27 | 6.73 | 7.13 | 7.56 |
| உதவித் தொகைகளும் நிதி மாற்றங்களும் | 13173.95 | 13831.46 | 13892.75 | 18948.13 | 17103.71 | 17810.98 | 20482.63 | 22838.13 |
| மூலதன ஒதுக்கீடு | 6431.64 | 7462.23 | 8333.04 | 8900.14 | 10497.67 | 10071.89 | 11582.67 | 13320.07 |
| நிகரக் கடன் வழங்கல் | 200.00 | 768.85 | -220.00 | 355.72 | 553.79 | 727.41 | 741.96 | 756.80 |
| **நிதிக் குறியீடுகள்** | | | | | | | | |
| **முதன்மை உபரி(+) / பற்றாக்குறை (-)** | **-1240.17** | **2387.17** | **-2213.26** | **-3209.56** | **-4730.98** | **-5488.96** | **-5637.75** | **-7042.26** |
| வட்டி செலுத்துதல் | 5999.33 | 6072.75 | 5800.89 | 6038.57 | 6255.35 | 6334.47 | 6651.19 | 6983.75 |
| **மொத்த வருவாய் வரவுகளில் செலுத்தப்பட்ட வட்டித் தொகை** | 13.98% | 12.88% | 11.77% | 10.96% | 10.91% | 10.93% | 10.49% | 9.91% |
| **வருவாய் உபரி(+) / பற்றாக்குறை (-)** | **-607.86** | **4545.49** | **98.89** | **7.73** | **65.12** | **-1024.14** | **35.68** | **50.87** |
| மொத்த வருவாய் வரவுகளில் வருவாய் உபரி(+) / பற்றாக்குறை (-) % | -1.42% | 9.64% | 0.20% | 0.01% | 0.11% | -1.77% | 0.06% | 0.07% |
| நிதி உபரி(+) / பற்றாக்குறை(-)யில் வருவாய் உபரி(+) / பற்றாக்குறை (-) | 8.40% | -123.33% | -1.23% | -0.08% | -0.59% | 8.66% | -0.29% | -0.36% |
| **நிதி உபரி(+) / பற்றாக்குறை(-) (சரிக்கட்டப்பட்டவை) #** | **-7239.50** | **-3685.59** | **-8014.15** | **-9248.13** | **-10986.33** | **-11823.43** | **-12288.95** | **-14026.01** |
| மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதி உபரி(+) / பற்றாக்குறை(-) (சரிக்கட்டப்பட்டவை) % | -2.68% | -1.22% | -2.58% | -2.65% | -2.96% | -2.99% | -2.73% | -2.73% |
| **மாநில மொத்த உற்பத்தி மதிப்பு (GSDP)** | **270181** | **302096** | **310757** | **348921** | **370943** | **395153** | **450474** | **513540** |
| **தொகுக்கப்பட்ட கணக்குகள் *** | | | | | | | | |
| தொகுக்கப்பட்ட வருவாய் உபரி(+) / பற்றாக்குறை (-) | **-1378.27** | **1047.87** | **-2079.12** | **-3526.94** | **-2112.88** | **-4050.61** | **-2531.32** | **-1825.13** |
| தொகுக்கப்பட்ட நிதி உபரி(+) / பற்றாக்குறை (-) | **-9634.91** | **-7369.37** | **-10445.98** | **-13070.52** | **-13959.87** | **-15106.36** | **-15124.44** | **-16580.35** |
| மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் தொகுக்கப்பட்ட நிதி உபரி(+) / பற்றாக்குறை(-) | -3.57% | -2.44% | -3.36% | -3.75% | -3.76% | -3.82% | -3.36% | -3.23% |

** இவை மாநில வரவு–செலவுத் திட்டத்துடன் தமிழ்நாடு மின்வாரியத்தின் நிதி செயல்பாட்டினையும் குறிக்கும்..*

*# இவை, சரிக்கட்டப்பட்ட எண்கள் என்பதால் இந்த மதிப்பீடுகள் நிதிக் கணக்குகள் மற்றும் ஆண்டு நிதி விபர அறிக்கையுடன் பொருந்தாது*